RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL



மலர்:- 30, 10 நவம்பர 2023 இதழ்:- 26

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000


## தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண யாழ். உணவகத்தில் இருந்து மோடிக்கு கடிதம் எழுதினால் மட்டும் போதாது



இலங்கை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை முடுக்கி விட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகா ணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜபெருமாள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். கோவையில் ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலே அவர் மேலும் கூறுகையில் 1983-87 காலப் பகுதியில் இலங்கையின் தமிழ் கிளர்ச்சிக் குழுக்களும் கட்சிகள் (4ம் பக்கம் பார்க்க)


BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund


## தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் திட்டமிடப்பட்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மாபெரும் போதை விருந்து



யாழ்நகர் பகுதியில் அமைந்துள்ள பிரபல விடுதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு 'DJ night' எனும் பெயரில் போதை விருந்து கொண்டாட்டம் ஒன்று இடம் பெற்ற (6ம் பக்கம் பார்க்க)




BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4


## உள் விவகாரங்களில் சீனா தலையிடாது ஆனால் சீன முதலீட்டாளர்களை தமிழர்கள் ஆதரிப்பார்கள்



இலங்கையின் உள் விவகாரங்களில் சீனா தலையிடாது என யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் கூறினார் சீனத் தூதுவர். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீனத்தூதுவர் தனியார் விடுதியில் யாழ்.மாவட்டத்திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்தார்.(5ம்பக்கம் பார்க்க)

## திருக்கோணேஸ்வரத்தை பெருங் கோயிலாக புனரமைக்க இந்தியா உதவுமென உறுதி!




BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

**www.AgentSiva.com**

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva

B.Comm. Sales Representative

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7

NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Simcoe St N & Conlin Rd



**Oshawa** **$279,000**

Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Eglinton / Mccowan



**Scarborough** **$499,900**

Bedrooms: 2 Washrooms: 2
Convenience living on Eglinton line


### Warden Ave / Enterprise Blvd



**Markham** **$749,000**

Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407


### Dundas/Hurontario St



**Mississauga** **$599,000**

Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Warden/Steeles



**Scarborough** **$760,000**

Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space


### Main St. E & Russell St.



**Southgate** **$799,999**

Bedrooms: 4 Washrooms: 3
Detached Home W/3063 Sq Ft

### Kennedy Rd & Bovaild Dr. E



**Brampton** **$1,100,000**

Bedrooms: 3 Washrooms: 3
recently renovated, sep. entrances

### Eglinton Ave & Danforth Rd



**Toronto** **$1,150,000**

Bedrooms: 4 Washrooms: 4
Low Maintenance Fees.

### Fletcherscreek Blvd/Bovaird Dr



**Brampton** **$3,500**

Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!


### Markham Rd & Lawrence Ave




**Scarborough** **$2,000**

Basement for lease
Close To TTC, Shopping & 401.

### Meadowvale / Sheppard




**Scarborough** **$1,[illegible]000**

Bedrooms: 1 Washrooms: 1
Great neighbourhood

### 9th Line/14th Ave



**Markham** **$1,689,000**

Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

*Looking for more house?*

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதை உலகம் இன்று வரை ஏற்றுக் கொள்ளவில்லை பாலஸ்தீன பத்திரிகையாளர்

2009இல் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் இன்றுவரை அவர்களின் துயரத்தினை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை ஏன் இனப்படுகொலை என்ற வகைப்படுத் தலிற்குள் கூட சேர்க்கப்படவில்லை என பாலஸ்தீனி பத்திரிகையாளர் ஹெப் ஜமாஸ் டுவிட்டரில் பதிவிட்டு ள்ளார்.

பாலஸ்தீனியர்கள் இனப்படுகொலை தனித்துவமானது இல்லை என்பதை தற்போது அதிகளவிற்கு நான் உணர் கின்றேன். எந்த வகையிலும் நாங்கள் விசேடமானவர்கள் இல்லை.

2009இல் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் இன்றுவரை அவர்களின் துயரத்தினை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை ஏன் இனப்படுகொலை என்ற வகைப்படுத் தலிற்குள் கூட சேர்க்கப்படவில்லை.

சீற்றம் மட்டும் போதாது என்பதை வரலாறு எமக்கு கற்றுத்தந்துள்ளது. அனுதாபம் மாத்திரம் போதாது.

எங்கள் மக்கள் உலகம் முழுவதும் படுகொலைகளை எதிர் கொள்கின்ற னர். உண்மை என்னவென்றால் பெரும்பான்மையான மக்கள் இனப் படுகொலையை இடை நிறுத்துவத ற்காக தங்கள் வாழ்க்கையை சில நிமிடங்கள் இடை நிறுத்திக் கொள்ள மாட்டார்கள் .

நாங்கள் மிகவும் வசதியாக இருக் கின்றோம் என நான் நினைக்கின் றேன்.



ஆயினும் நான் கைவிடமாட்டேன் – இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றேன். பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டாலும் பாலஸ்தீன மக்கள் தப்பிப் பிழைப்பார்கள் நாங் கள் சுதந்திரத்தை தவிர வேறு எத னையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எங்கள் வாழ்நாளில் அதனை பார்க்க முடியாமல்போனால் கூட அதனை தவிர வேறு எதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இஸ்ரேலிற்குஜேர்மன் அரசாங்கம் இராணுவஉதவியாக நவம்பர் 2ம் திகதி 300 மில்லியன் யூரோக்களை அனுப்பஇணங்கியுள்ளது. 2022 இல் இஸ்ரேலிற்கான இராணுவ உதவி 32 மில்லியனாக காணப்பட்டது.

பாலஸ்தீனியர்களின்படுகொலையை மேலும் அதிகரிக்க கடந்த ஆண்டு வழங்கிய தொகையை விட தற்போது அதிக தொகையை வழங்குகின்றனர். எங்கள் குடும்பங்கள் அனைத்தும் இறந்து விடும் அல்லவா?

# கதவை இழுத்து மூடிய யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்! அறிக்கையை மீளப் பெற்ற பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்



மாணவர்களின் கதவடைப்பு போராட் டத்தை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார் பாக வெளியிட்ட அறிக்கையை திரு ம்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரி யர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகா விற்கு ஆதரவாக வெளியிட்ட அறிக் கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாண வர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மூடி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது. இதன்போது ஆசிரியர் சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரை யாட மாணவர்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்கு சாதகமான பதில் கிடைக் காத நிலையில் மாணவர்களால் பிரதான நுழைவாயில் மூடப்பட்டு போராட்டம் இடம்பெற்றது.

நேற்றுகாலை முதல் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்தில் ஒன்று கூடிய பல்கலைக்கழக மாணவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த அக்டோபர் 31ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்ய ப்பட்ட நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து கொண்டு சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம் என்ற தலையங்கத்திலே உரையாற்ற இருந்தார். இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் நெருக்குதலி னால் கைவிடப்பட்டது.

இந்நிலையில் சட்டத்தரணி சுவாஸ் திகா அருளிங்கம் மீளவும் அழை க்கப்பட்டு சட்டத்துறையிலே தனது உரையினை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தினை உருவாக்க யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக் கழக நிருவாகம் ஆகியன இணை ந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலை க்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார்பாக வெளியிட்ட அறிக்கையை திரும்ப பெறுவதாக அறிவித்துள்ளது.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண யாழ். உணவகத்தில் இருந்து மோடிக்கு கடிதம் எழுதினால் மட்டும் போதாது

இலங்கை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை முடுக்கி விட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜபெருமாள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். கோவையில் ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் 1983-87 காலப்பகுதியில் இலங்கையின் தமிழ் கிளர்ச்சிக் குழுக்களும் கட்சிகள், புதுடெல்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்திய தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்ததை, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈபிஆர்எல்எப்) முன்னாள் தலைவர் வரதராஜப்பெருமாள் நினைவு கூர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விருந்தகத்தில் இருந்து கொண்டு, பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினால் மட்டும் பலன் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். 1983 மற்றும் 1990க்கு இடையில் உரிய விடயங்களை செய்ய முடியவில்லை என்றாலும் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசாங்கத்திற்கும் பொறுப்பு உள்ளது.

இலங்கை தமிழர் தீர்வு விடயத்தில் இந்திய அரசாங்கம், தனித்து செயல்பட முடியாது. அதற்கு இந்திய மக்கள் மற்றும் தலைவர்களின் ஆதரவு தேவை.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவிற்குள் குரல் கொடுக்கப்பட வேண்டும். புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது



சாத்தியமாகும். எனவே முதன்மைப் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை 13வது திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த விஷயத்தை ஆய்வு செய்ய இந்திய அரசாங்கம் சட்ட வல்லுநர்கள் குழுவை அமைக்க வேண்டும். அத்துடன் திருத்தத்தின் சரியான செயல்படுத்தலை' எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதை இலங்கைக்கு தெரிவிக்க வேண்டும்.

தமிழகத்தில் வாழும் இலங்கை ஏதிலிகள் தொடர்பான பிரச்சினையை மனிதாபிமானத்துடன் பார்க்க வேண்டும். இந்தியக் குடியுரிமைக்கான கோரிக்கை கடைசியாகக் கருதப்பட்டாலும், முதலில் கவனிக்கப்பட வேண்டிய 'அழுத்தமான சிக்கல்கள்' இருக்கின்றன.

இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ முறையான வேலை வாய்ப்பை பெற விரும்புபவர்களுக்கு இந்திய அரசாங்கம் தனித் தனியாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாகவோ நிரந்தர ஆவணங்களை வழங்க முடியும்.

அதேபோல், ஏதிலிகளுக்கு வீட்டு வசதிக்காக சொத்து வாங்கும் உரிமையை வழங்க முடியும். முகாம் ஏதிலிகள் இலங்கைக்கு வருவதற்கான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க எமக்கு ஆதரவாக செயற்படாவிடின் நாம் சீனாவுடன் சேர்ந்துவிடுவோம் எனக்கூறி இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் தாம் ஒருபோதும் செயற்படப் போவதில்லை எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், மானசீகமான முறையில் தாம் இந்தியாவின் நண்பராகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியாவின் போக்கு, சீனத்தூதுவரின் யாழ் விஜயம் மற்றும் இந்தியா - சீனா விவகாரத்தில் நடுநிலையாக செயற்படல் என்பன தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே சுமந்திரன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

சீனத்தூதுவரின் யாழ் விஜயம் குறித்து தாம் எந்தவொரு எதிர்ப்பையும் வெளியிடவில்லை எனவும், யாரேனும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவது குறித்து ஏன் எதிர்ப்பை வெளியிட வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதேவேளை சீனாவை சார்ந்து செயற்படுவதோ அல்லது 'நீங்கள் எமக்கு ஆதரவாக செயற்படாவிடின் நாம் உங்களுடைய எதிரியுடன் சேர்ந்துவிடுவோம்' என்று இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவதோ தமக்குப் பொருத்தமானதல்ல எனவும், தாம் ஒரு போதும் அவ்வாறு நடந்து கொள்ளப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 'நாம் இந்தியாவின் மானசீக நண்பராக செயற்பட்டு வருகின் றோம்' என்று சுட்டிக் காட்டிய சுமந் திரன், நாம் அவர்களது உண்மையான நண்பர்கள் என்பது இந்தியாவுக்கும் தெரியும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை அரசியல் தீர்வு உள்ளிட்ட தமிழர் நலன்களில் இந்தியாவுக்கு அக்கறை இல்லை எனவும், தமது நாட்டின் தேசிய பாதுகாப்புசார் நலன்களை முன்னிறுத்தியே வட, கிழக்கு தமிழ் அரசியல் தலைமையை இந்தியா பயன்படுத்திக் கொள்கின்றது எனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா - அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!
எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# உள்விவகாரங்களில் சீனா தலையிடாது! சீன முதலீட்டாளர்களை தமிழர்கள் ஆதரிப்பார்களென சீனத்தூதுவர் நம்பிக்கை



இலங்கையின் உள் விவகாரங்களில் சீனா தலையிடாது என யாழ். சிவில் சமுகப் பிரதிநிதிகளிடம் கூறினார் சீனத் தூதுவர். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீனத்தூதுவர் தனியார் விடுதியில் யாழ்.மாவட்டத்திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்தார்.

இந்த சந்திப்பில் சிவில் சமூக பிரதிநிதிகளசார்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், சமூக பொருளாதார ஆய்வாளர் செல்வின், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மற்றும் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அதில் கலந்துகொண்ட சீனத் தூதுவர் இலங்கையில் சீனாவால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தார். அதையடுத்து சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள் தமிழ் மக்களின் இனப் பிரச்சனைத் தீர்வு தொடர்பில் சீனத் தூதருக்கு எடுத்து கூறினர். இலங்கைக்கு அழுத்தம் தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த சீனத் தூதுவர், வெளிநாட்டின் உள்விவகாரங்களில் சீனா தலையிடாது எனத் தெரிவித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தி விடயங்களில் உதவிகள் செய்யத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இனப் பிரச்சனைக்கு தீர்வு வேண்டும் என தூதுவருக்கு புத்திஜீவிகள் எடுத்துரைத்துள்ளனர்.

இதேவேளை சீனாவில் இருந்து இலங்கைக்கு கடல் உணவு இறக்குமதி செய்யப்படாது. குறிப்பாக வட மாகாணத்திற்கு கடல் உணவு இறக்குமதி செய்யப்படாது என இலங்கைக்கான சீன தூதுவர் ஷி ஷென் ஹொங் தெரிவித்தார்.

சீன தொழிற்துறையினர், முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் எனவும் அவர் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரதை உயர்த்த முதலாவதாக சீனாவே கை கொடுத்தது. சீனா எதிர்காலத்திலும் கை கை கொடுக்கும். 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகளை சீனா வழங்கவுள்ளது. 5 மில்லியன் உணவு பொருட்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்காகவும் 5மில்லியன் வீட்டு திட்டத்திற்கும் வழங்கவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா சென்ற போது இலங்கை கடலுணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது.

சீனா உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார நாடு. மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்கே வரவேற்கிறோம். சீன தொழிற்துறையினர், முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் என நம்புகிறேன் என்றார்.

# காசா மீது அணுவாயுத தாக்குதல் நடத்த வேண்டும் கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் அமைச்சர் நீக்கம்!

காசா மீது அணுவாயுதங்களை வீசுவதும் ஒரு சாத்தியக்கூறு என தெரிவித்த இஸ்ரேலிய அமைச்சர் அமைச்சரவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் இவ்வாறு தெரிவித்ததை தொடர்ந்து இஸ்ரேலிய அரசாங்கம் கடும் கண்டனங்களை எதிர்கொண்டது.

பெஞ்சமின் நெட்டன்யாகுவின் கலாச்சார அமைச்சரும் அதிதீவிரவாத அரசியல்வாதியுமான அமிச்சே எலியாகு பாலஸ்தீன பிரதேசங்கள் மீது இஸ்ரேலின் பதிலடி குறித்து தான் திருப்தியடையவில்லை என குறிப்பிட்டுள்ளார். காசாபள்ளத்தாக்கை மீண்டும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்துவதை அவர் ஆதரித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களின் நிலை குறித்த கேள்விக்கு அவர் அவர்கள் அயர்லாந்திற்கு செல்லலாம் அல்லது பாலைவனம் செல்லலாம் என தெரிவித்துள்ளார். காசாவில் உள்ள அரக்கர்கள் தங்களிற்கான வழியை கண்டுபிடிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். காசா பள்ளத்தாக்கிற்கு உயிர் வாழ உரிமையில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் ஹமாஸ் பாலஸ்தீன கொடியை ஏந்துபவர்கள் எவரும் உயிர்வாழ தகுதியுடையவர்கள் அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, இஸ்ரேலின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் என இரு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் வரத் தொடங்கின. அவரை அரசில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழ ஆரம்பித்தன. இந்த அறிக்கையை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் ஆகியோரும் விமர்சித்திருக்கின்றனர்.

இஸ்ரேல் பிரதமர் அலுவலகம், அமைச்சர் எலியாஹூ, போர்க்காலத்தில் முடிவுகளை எடுக்கும் பாதுகாப்பு அமைச்சரவையில் இல்லை, என்று தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், ஹமாஸுக்கு எதிரான போரில் அறிவுரைகளை வழங்கும் அமைச்சரவையில்கூட அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை,' என்று தெரிவித்திருக்கிறது. பிரதமர் நெதன்யாகு, இந்த அறிக்கை எதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறியிருக்கிறார்.



இதேவேளை இஸ்ரேல் அமைச்சரின் இந்தக் கருத்தை இரானிய அதிகாரிகள், ஊடகங்கள், மற்றும் சமூக ஊடகங்கள் கடுமையாக விமர்த்திருக்கின்றன. இந்தச் செய்தியை இரானிய நாளிதழ்கள் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளன. இரானின் வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியன் இஸ்ரேல் தனது அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

அவர், தனது எக்ஸ் பக்கத்தில், 'இஸ்ரேலிய அமைச்சரின் அணுகுண்டு அச்சுறுத்தல் இஸ்ரேல் உண்மையில் தோற்கடிக்கப்பட்டதற்கான ஆதாரம். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலும் சர்வதேச அணுசக்தி முகமையும் உடனடியாக நடவடிக்கை எடுத்து இஸ்ரேலை நிராயுதபாணியாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். இரானின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் நாசர் கனானியும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் அமைச்சரின் இந்த அறிக்கை முழு உலகிற்கும் ஒரு எச்சரிக்கை என்று அவர் கூறியுள்ளார்.

திங்களன்று ஒரு செய்தியாளர் கூட்டத்தில் இந்த அறிக்கையை விமர்சித்த கனானி, 'சர்வதேச சமூகம் இந்த அச்சுறுத்தலை அறிந்துகொள்ள வேண்டும், ஏனெனில் இது அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திற்குச் சவால் விடுகிறது,' என்றார்.

# நில அபகரிப்புக்கு எதிராகப் போராடுதல்

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் நல்லிணக்கம் என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டே மறுபுறம் பல்வேறு வழிகளிலும் நில ஆக்கிரமிப்பை கண்டும் காணாமல் விடுவதன் ஊடாக, ஆக்கிரமிப்பிற்கு அரசாங்கங்கள் பல்வேறு வழிகளில் உதவியிருக்கின்றன.

கடந்த பதின்நான்கு வருடங்களில் விகாரை நிர்மாணம், தொல்பொருள் இடங்கள், உல்லாசப்பயண அபிவிருத்தி என பல வழிகளிலும் நில ஆக்கிரமிப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், இவைகள் எவையுமே ஆக்கிரமிப்பு என்னும் வடிவத்தில் நிகழவில்லை. இந்த இடத்தைத் தான் தமிழர் தரப்புக்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

வரலாற்றுரீதியாக பௌத்த விகாரைகள் இருந்த இடங்கள் என்னும் பெயரிலேயே, அனைத்து விடயங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. ராஜபக்ஷ குடும்ப அதிகாரம் இந்த விடயங்களுக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்கியது.

எவர் வேண்டுமனாலும் காணிகளை அபகரிக்கலாம் என்னும் வகையில் கதவை அகலத் திறந்து விட்டது. இந்தக் காலத்தில் வடக்கு, கிழக்கில் குறிப்பாக திருகோணமலையில் உல்லாசப்பயண மேம்பாடு என்னும் பெயரில் நிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் அதிகமானவர்கள் ராஜபக்ஷக்களோடு தொடர்புபட்டவர்கள். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து இந்த நிலைமைகளில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தவாறு விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பிற்கான வரைபு, உபக்குழுக்கள் என்றெல்லாம் தங்களுக்குள் முட்டிக் கொண்டிருந்த போது, மறுபுறம் தனது தந்தையாரான ரணசிங்க பிரேமதாசவின் 94ஆவது, பிறந்த தினத்தில் புதிய விகாரைக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார் சஜித் பிரேமதாச. அத்தோடு பிரேமதாசவின் நினைவாக, 1,125 விகாரைகள் கட்டப்படு மென்றும் சூளுரைத்தார்.

அதன் ஆரம்பமாக 25 மாவட்டங்களிலும், மாவட்டங்களுக்கு ஒரு விகாரை என்னுமடிப்படையில் அடிக்கல்கள் நட்டப்பட்டன. அந்த விகாரைகளுக்கான கட்டுமாணங்களே தற்போது இடம்பெற்று வருகின்றன. தையிட்டி விகாரையும் மைத்திரி ரணில் ஆட்சிக் காலத்தின் அடிக்கல் நடப்பட்ட ஒன்றுதான். நிலைமை இவ்வாறிருக்க நில ஆக்கிரமிப்பு என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டிருப்பதால் மட்டும், நில ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தி விட முடியாது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் அனைவருமே, பௌத்தத்தை ஓர் அரசியல் கருவியாக பயன்படுத்துபவர்கள் தான்.

இதனை தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்வது? காணி அதிகாரம் தமிழர்களிடம் இருந்தால் மட்டும்தான் இந்த விடயத்தை, தென்னிலங்கையின் விருப்பத்திற்கு அமைவாக முன்னெடுப்பதை தடுக்கமுடியும். இதனைத் தவிர வேறு வழியில்லை ஏனெனில், சர்வதேச அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று, ஒரு விடயத்தை திரும்பத்திரும்ப கூறிக் கொண்டி ருப்பதில் பயனில்லை.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் பௌத்தமயமாக்கல் நடவடிக்கை ஒரு மத மேலாதிக்க நடவடிக்கை என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கூறியிருக்கின்றது. அமெரிக்க மத விகாரங்களுக்கான குழுவின் இந்த ஆண்டுக்கான, அறிக்கையிலும் தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை முன்னிறுத்தி செயல் படுகின்றது என்னும் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

இவ்வாறான சர்வதேச அவதானங்களுக்கு மத்தியில் தான் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் அனைத்து கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். இதற்கு முதலில், வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் அனைத்து கட்சி மாநாடு ஒன்றை கூட்ட வேண்டும். விடயங்களை அனைவருமாக, ஜனநாயக வழியில் எவ்வாறு எதிர்கொள்வது, அதற்காக உடனடி இடைக்கால நீண்டகால அடிப்படையில் எவ்வாறு இயங்குவது என்னுமடிப்படையில் சிந்திக்க வேண்டும். இதற்கென அனைத்து கட்சிகள் குழுவொன்றை நியமிக்க வேண்டும். இலங்கைக்குள் சட்டரீதியில் கையாளக் கூடிய விடயங்களை கையாளும் அதேவேளை, தொடர்ச்சியான அரசியல் அழுத்தங்களை எவ்வாறு பிரயோகிப்பது என்னுமடிப்படையிலும் சிந்திக்க வேண்டும்.

# தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் திட்டமிடப்பட்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மாபெரும் போதை விருந்து





யாழ்.நகர் பகுதியில் அமைந்துள்ள பிரபல விடுதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு 'DJ night' எனும் பெயரில் போதை விருந்து கொண்டாட்டம் ஒன்று இடம் பெற்ற விடயம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கொழும்பை சேர்ந்த நிறுவனத்தின் பெயரில் சிலர் சமூக வலைத்தளங்களின் ஊடாக பார்ட்டிக்கு அழைப்பு விடுத்து இருந்தனர். ஆண்களுக்கு நுழைவு சீட்டு 1500 ரூபாய்க்கும் அவர்களுடன் வரும் பெண்களுக்கு 1000 ரூபாய் என விளம்பரம் செய்து தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் கோரி இருந்தனர்.

அதன் அடிப்படையில் அன்றைய தினம் பல இளையோர் நுழைவு சீட்டுக்களை பெற்று தமது பெண் நண்பிகளுடன் கொண்டாட்டத்திற்கு சென்று இருந்தனர்.

முன்னதாக DJ இசையுடன் ஆரம்பித்த கொண்டாட்டம் பின்னர் மது விருந்துடன் நிகழ்வு சூடு பிடிக்க தொடங்கியது.

அதனை தொடர்ந்து அங்கு வந்த சிலர் மது போதை தலைக்கு ஏற தாம் கொண்டு வந்திருந்த கஞ்சா ஐஸ் போன்ற போதை பொருளையும் நுகர தொடங்கி கடும் போதையில் ஆட்டம் போட்டுள்ளனர்.

ஹோட்டலில் மதுபானம் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும், ஆனாலும் அங்கு வந்த பலரும் தம் வசம் உயிர்கொல்லி போதைப்பொருளை வைத்திருந்ததாக விருந்தில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கலாசாச்சர சீரழிவு நிகழ்வுக்கு குறித்த விடுதி துணை போனமை தொடர்பில் பலரும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தென்பகுதிகளில் சமூக வலைத்தளங்கள் ஊடாக இவ்வாறான போதை விருந்துக்கு அழைப்பு விடுப்பவர்களுக்கு எதிராகவும், விருந்து கலந்து கொண்டவர்களுக்கு எதிராகவும் காவல்துறையினர் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையிலையே தற்போது யாழ்ப்பா ணத்தில் அவ்வாறான விருந்து கொண்டாட்டத்தை தெற்கை சேர்ந்த வர்கள் திட்டமிட்டு ஏற்பாடு செய்து வருகின்றனர் எனவும். இவ்வாறானவர்களுக்கு எதிராக காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க தனிமையில் வீதியில் செல்லும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவியிடம் ஆணுறுப்பை காட்டி பாலியல் சேட்டையில் ஈடுபடும் நபர் தொடர்பான காணொளி வெளியாகியுள்ளது. பல்கலைக்கழக மாணவி ஒருவரால் எடுக்கப்பட்ட இந்த காணொளி வெளியாகி பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆத்திசூடி வீதியில் ஆணுறுப்பை காட்டியவாறு மோட்டார் சைக்கிளில் பல்கலைக்கழக மாணவியை பின்தொடர்ந்த நபரின் தகாத செயலை பல்கலைக்கழக மாணவி ஒருவர் துணிகரமாக காணொளியில் பதிவு செய்துள்ளார். காணொளி எடுக்கப்படுவதை அவதானித்த குறித்த நபர் மோட்டார் சைக்கிளை திருப்பிக் கொண்டு செல்வதை காணொளியில் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவிகள் விரிவுரைகளை முடித்து விட்டு பல்கலைக்கழக விடுதிகளுக்கும் தங்குமிடத்துக்கும் நடந்து செல்லும்போதும் வரும் போதும், வீதியில் வருகின்ற ஒரு சிலர், அந்த மாணவிகளுக்கு ஆணுறுப்பை காட்டி பாலியல் சைகைகளை செய்கின்ற நிலைமை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தகாத செயல்களை செய்யும் சிலர் கடந்த காலங்களில் கையும் மெய்யுமாக பிடிபட்டு பொதுமக்களினாலும் பல்கலைக்கழக மாணவர்களாலும் நையப்புடைக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



**Special Classes for IB, AP & University Students**
**Math: Grade 9-12, Advanced Functions,**
**Calculus & Vectors and Data Management.**
**Physics: Grade 11 & 12**

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

**Instructor: S. Elancheliyan,** B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

**Tel: 416-524-0424**

# திருக்கோணேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைக்க இந்தியா உதவுமென உறுதி!



திருக்கேதீஸ்வரத்தைப் புனமைத்துத் தந்தமை போல் பாடல் பெற்ற மற்றைய தலமான திருக் கோணேஸ்வரத்தையும் பெருங்கோயிலாகப் புனர மைக்கும் திட்டம் முன் வைக்கப்படுமானால் அதனை இந்தியா சாதகமாகப் பரிசீலித்து அதற்கு உதவும் என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

திருக்கோணேஸ்வரரின் புனித பூமியில் வைத்து இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார். மூன்று நாள் பயணமாக இலங்கை சென்றிருந்த நிர்மலா சீதாராமன் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

ஆலய நிர்வாகிகள் அவரை வரவேற்று உரையாடி னர். அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் அப் போது ஆலய நிர்வாகிகள் சார்பில் ஒரு கோரிக் கையை முன்வைத்தார்.

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு, ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இன்று ஓரளவு பேணிப் பாதுகாக்கின்றோம். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயத்தையும் மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கருங்கற்களால், பெருங் கோயிலாகப் புனரமைத்துத் தர இந்தியா முழு உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திருக்கோணேஸ்வரம் ஆலய நிர்வாகத் தலைவர் துசியந்தன் உட்படப் பலரும் அந்த உரை யாடலின் போது உடனிருந்தனர்.

எமது கோரிக்கையைச் செவிமடுத்த இந்திய நிதி அமைச்சர், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கோணேஸ்வரத்தையும் புனரமைக்க உதவ முடியும் என்று தெரிவித்தார். அதற்கான முன்னேற்பாடுகள், முறைப்படியான கோரிக்கைகள் அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்மலா சீதாராமன் உற்சாகத்தோடு தெரிவித்தமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது' என்று ஆறு. திரு முருகன் தெரிவித்தார்.

# தமிழ்மக்களுக்கு நிலையான தீர்வை வழங்குவதாக நிர்மலா சீதாராமனிடம் ரணில் உறுதியாளித்தாராம்

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தேசிய ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நிலையான தீர்வை வழங்கியே தீருவார். இதை இலங்கை வந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடமும் ஜனாதிபதி கூறியுள்ளார் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்குத் தீர்வு வேண்டும் என்று சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் விடுக் கும் கோரிக்கையை ஏற்கின்றோம். அதேபோல் அவர் களும் ஜனாதிபதியின் தேசிய ரீதியான செயற்பாடு களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போது தான் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிரணி என இரு தரப்பினரும் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை



முன்மொழிந்து அதை நிறைவேற்றிக்கொள்ள முடி யும் என்றார்.

# இந்த வருடத்தில் மாத்திரம் 1800 பேராசிரியர்கள் இலங்கையை விட்டு வெளியேறினார்கள்!

இந்த வருடத்தில் மாத்திரம் பல்கலைக்கழக பேராசி ரியர்கள் 1,800 பேர் நாட்டை விட்டு வெளியேறி யுள்ளதாக இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங் களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 800 பேர் இலங்கையில் பல்கலைக்கழக சேவையிலிருந்து நிரந்தரமாக வெளியேறியுள்ளதாக அதன் பேச்சாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார். ஏனைய 1,000 பேர் கல்வி விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழகங்களில் வசதிகள் இன்மை பாரிய நெருக்கடியாக மாறியுள்ள தாக சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அமைப்பில் நிலவும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர் கள் தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
31வது ஆண்டு விழா
21 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை

# இந்தியாவிடம் எதிர்பார்ப்பதற்கு முன்னர்....

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்று தமிழரசு கட்சியின் மூத்த அரசியல்வாதி, இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின் றார். இந்தியாவை நோக்கி, சம்பந்தன் கோரிக்கை முன்வைப்பது அதேபோன்று, தமிழ்கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை முன்வைப்பது புதிய விடயமல்ல. ஆனால் இந்தியாவை நோக்கி கோரிக் கைகளை முன் வைப்பதற்கு முன்னர், தமிழ் தேசியவாத கட்சிகள் என்ன செய்ய வேண்டும்? என்பதில் இன்றுவரையில் கட்சிகள் மத்தியில் தெளிவான நிலைப்பாடோ, ஒன்றுபட்ட வேலைத் திட்டமோ வெளிப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வரும் ஒரேயொரு நாடு இந்தியா தான். இந்தியாவிற்கு மட்டும் தான் அந்த உரித்தும் உண்டு. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன் வைத்துத் தான் இந்தியாவின் நேரடித் தலையீடும் நிகழ்ந்தது. அந்த பின்புலத்தில் தான்

இந்திய -இலங்கை ஒப்பந்தமும் நிகழ்ந்தது. அன்றைய காலத்தில், இலங்கையின் மீதான இந்தி யத் தலையீட்டுக்கு பின்னால் அன்றைய உலக அரசியல் சூழலும், அது தொடர்பான விசேட கரிசனைகளும் இருந்தமை எந்தளவிற்கு உண் மையோ அதேயளவிற்கு தமிழ் மக்களுக்கு நியாய மான ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்னும் கரிசனையும் இருந்தது. ஆனால் அந்தத் தீர்வு, இந்தியாவினால் தீர்மானிக கப்படும் ஒன்றாகவே இருக்க வேண்டுமென்பதிலும் இந்தியா ஆர்வம் கொண்டிருந்தது.

ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில் இந்தியா வின் தீர்மானங்களோடு இணைந்து சென்று தான் பிரச்சனைக்கான தீர்வை தமிழர் தேடியிருக்க வேண் டும். ஆனால் அது நிகழவில்லை. பிற்காலங்களில் இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் எட்ட நிற்கும் நிலைப்பாட்டையே பின்பற்றியது. யுத்தம் இடம் பெற்ற காலம் முழுவதும், இந்தியா தமிழர் விடயத் தில் பிரத்தியேக ஈடுபாட்டை காண் பிக்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியா தொடர்பில் ஆதரவான கருத்துக்களை அவ்வப்போது வெளிப் படுத்திய போதிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு டன் உரையாடக் கூடிய நிலையில், இந்திய மத்திய அரசாங்கங்கள் இருக்கவில்லை.

இறுதிக் காலத்தில் நிலைமைகள் விடுதலைப் புலி களுக்கு எதிராக திரும்பியபோது, நெருக்கடியிலி ருந்து தப்ப வேண்டுமென்றால் இந்தியாவின் அரவணைப்பை பெறுவதைத் தவிர வேறு எந்த வொரு வழியும் இல்லை என்பதில் அன்ரன் பாலசிங்கம் தெளிவாக இருந்தார். இந்த அடிப் படையில் தான் இந்திய தொலைக் காட்சி ஒன்று க்கு நேர்காணல் வழங்குவதன் ஊடாக, இந்தியா வுடன் ஒரு புதிய பயணத்திற்கான சிறிய வாய்ப்பு கிடைக்குமா என்று தேடினார். கடந்த காலத்தில் இடம்பெற்ற சில கசப்பான சம்பவங்களுக்கு வருந்தி மன்னிப்புக் கோருவதாகவும் கூறினார். ஆனால் பாலசிங்கம் அவ்வாறு கூறிய காலத்தில், பாலத்திற்கு கீழ் அதிகம் நீர் ஓடி விட்டது. ஒரு தத்துவக் கூற்றுண்டு - அதாவது, ஆற்றில் ஒரே இடத்தில், இரண்டு தடவைகள் கால் பதிக்கக்க முடியாது.

2009 இற்கு பின்னர் மீண்டும் இந்தியாவை நோக் கிச் செல்லும் பயணத்தை சம்பந்தன் தலைமை யிலான கூட்டமைப்பினர் மேற்கொண்டனர் ஆனால் அதனை சரியாகச் செய்தனரா என்னும் கேள்விக்கு இன்று வரையில் பதிலில்லை. கடந்த நாடாளுமன்ற தேர்தல் பிரசாரங்களின் போது சம்பந்தன் இவ்வாறு கூறினார் எங்களுக்கு பின்னால் பிராந்திய சக்தியான இந்தியா இருக்கின்றது. அவ்வாறு கூறிய சம்பந்தன், உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க, சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவராக கருதப்படும் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்புக்கு, மாவையின் மகனின் திருமணத்தை காரணம் காண்பித்து, தமிழ் மக்களின் புத்திசாலித் தனத்தையே நகைப்புக்கிடமாக்கினார்.

அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்று கூறும் போது, முதலில் தமிழ் தேசிய கட்சிகள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி எந்தத் தீர்விற்கு இந்தியா அழுத்தங்களை கொடு க்க வேண்டும்? - இந்தியா அதன் கொள்கை நிலைப்பாடாக முன்வைத்துவரும், அரசியலமை ப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்ட விடயமா அல் லது சம்பந்தன் கடிதத்தில் உச்சரித்த சமஷ்டியா? சமஷ்டியென்றால் அதற்கு இந்தியாவின் பக்கத்திலி ருந்து எந்தவொருஅழுத்தமும் வரப்போவதில்லை

# இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை தமிழ் அரசியல் கட்சிகள் சந்திக்காதது ஏன்?

இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் இலங்கை விஜயம் குறித்த தகவல்கள் 'நாம் 200' நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் இரகசியமாக பேணப்பட்டமையினால், அவருடனான சந்திப்புக்கு அனுமதி கோருவதற்கு தமக்கு போதுமான கால அவகாசம் இருக்கவில்லை என இலங்கைத் தமிழரசு கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'நாம் 200' நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொள்வதற்காக நாட்டுக்கு வருகை தந்திருந்த இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களில் மகாநாயக்க தேரர்களை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அது மாத்திரமன்றி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான செயற்திட்டங்களுக்காக இந்திய அரசாங்கத்தினால் 15 மில்லியன் டொலர்களை அன்பளிப்புச் செய்வதற்கான இரு தரப்பு ஆவணங்கள் ஜனாதிபதிக்கும் இந்திய மத்திய நிதியமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின் போது பரிமாறிக்கொள்ளப்பட்டன.

ஆனால் இந்திய அரசாங்கத்தின் சார்பில் தலைவர்கள் எவரேனும் இலங்கைக்கு வருகை தந்தால், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டுச் செல்லும் வழக்கத்துக்கு மாறாக, இம்முறை நிர்மலா சீதாராமனுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறவில்லை. எனவே இச்சந்திப்பு இடம்பெறாமைக்கான காரணம் என்னவென்று வினவியபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாம் 200' நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாட்டுக்கு வருகைதருகிறார் என்ற விடயம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களால் மிகவும் இரகசியமாகவே பேணப்பட்டது. நிர்மலா சீதாராமனின் வருகை குறித்து அவர்கள் முன்னரே எம்மிடம் கூறியிருந்தால், நாம் அவரைச் சந்திப்பதற்கு கால அவகாசம் கோரியிருப்போம். எனவே இதனை எம்மிடம் கூறுவது பற்றி இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் தான் சிந்தித்திருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார். இருப்பினும் 'நாம் 200' நிகழ்வில் பங்கேற்றிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷஷி தரூர், பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட பிரதிநிதி ராம் மாதவ், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை ஆகியோரை நிகழ்வில் வைத்து சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிவித்த சுமந்திரன், அவர்கள் நாட்டின் சமகால நிலைவரம் குறித்து கேள்வி எழுப்பியதாகவும், அதற்கு வட, கிழக்கு மாகாணங்களில் தீவிரமடைந்துவரும் காணி அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி தான் பதிலளித்ததாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் சந்திப்பு இடம்பெறாமை குறித்து கருத்து வெளியிட்ட ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், இவ்விடயத்தில் இந்தியாவை குறை கூற முடியாது எனவும், தமக்கிடையே ஒற்றுமை இல்லாத நிலையில் 'யாரை சந்திப்பது?' என்ற கேள்வி அவர்களுக்கு இருக்கக்கூடும் எனவும் தெரிவித்தார். மேலும், இலங்கையில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கு இந்தியாவின் நிதியுதவிகள் பயன்படுத்தப்படும் பட்சத்தில், அவற்றை குறைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை மலையக மக்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற இந்திய அரசாங்கம் தயாராகவுள்ளதென நாம் 200 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். இதன்போது உரையாற்றுகையிலேயே இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் இங்கு உரையாற்றிய அவர்,

மலையக மக்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் ஆசிரியர் பயிற்சி வழங்கல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும். இந்திய நிதியுதவியின் கீழ் 4ஆம் கட்டமாக 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இலங்கை இந்தியாவுக்கு இடையிலான இணைப்புப் பாலமாக மலையகத் தமிழர்கள் திகழ்வர்கள் என நிர்மலா சீதாராமன் மேலும் கூறினார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# வரவு - செலவு தோற்கடிக்கப்பட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்! ஜனாதிபதித் தேர்தல் காலம் ஆகும்!

**கட்டுரையாளர்:**
**கனடாவில் இருந்து**
**– பனங்காட்டான் –**

யானை பலமான மிருகம். இதற்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கீழே விழுந்தால் இதனால் தானாக எழும்ப முடியாது. நான்கு பேர் சேர்ந்தால் தான் இதனை தூக்கி விட முடியும். நன்றியற்ற இந்த யானை தனது இருப்பைத் தக்க வைப்பதற்காக தன்னைத் தூக்கி விட்டவர்களையே துவம்சம் செய்யத் தயங்காது. அரசியலும் இது தான்

வராது ஆனால் வரும், வரும் ஆனால் வராது என்று சொல்லப்பட்டு வந்த சீன சமுத்திர ஆராய்ச்சிக் கப்பல் எப்படியோ வந்தது. ஷி யென் என்ற இக்கப்பல் இந்தியாவின் எதிர்ப்புகளையும் மீறி இலங்கைக் கடலுக்குள் புகுந்ததுதான் அதன் வல்லமை.

சமுத்திர ஆராய்ச்சியில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வுச் செயற்பாடுகளுக்கு பயன்படுமென்று சீன நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எதற்கு அது பயன்படும் என்பதுவே இந்திய அரசை நிமிர வைக்கும் கேள்வி. இந்தக் கப்பலின் ஆய்வு நோக்கம் என்னவென்பது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தெரியாததல்ல. இக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். முக்கிய மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதே இதன் நோக்கம். ஆனால், வேறு சில விடயங்களையும் அவர் ராஜரீக முறையில் கையாண்டதாக இந்திய முன்னணி ஊடகமொன்று தெரிவித்திருந்தது.

அடுத்து இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் இந்த மாதம் முதல் வாரத்தில் கொழும்புக்கு விஜயம் செய்வதாக இருந்தது. அமைச்சர் ஜெய்சங்கர் காரணம் கூறாமலே திடுதிப்பென இலங்கையை விட்டுப் புறப்பட்டது போல அமைச்சர் ராஜ்நாத்சிங்கின் கொழும்பு விஜயமும் காரணம் கூறாமலே ரத்துச் செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் விஜயம் அமைந்தது. திருமலை விஜயம், யாழ்ப்பாண விஜயம் என்பவைகளுடன் கொழும்பில் இடம்பெற்ற மலையகம் 20ஐ பெருநிகழ்வில் கலந்து கொள்வது பிரதானமானதாக இவ்விஜயத்தில் அமைந்தது.

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரத்தை பல கோடி ரூபாவில் புனரமைப்புச் செய்தது இந்தியா. இந்தியாவின் ஆதீனமொன்றின் நிரந்தர இருக்கையும் இங்கு உறுதி செய்யப்பட்டது.

1968ம் ஆண்டு திருமலை கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க புனித நகராகப் பிரகடனம் செய்தார். உள்ராட்சி அமைச்சராகவிருந்த மு.திருச்செல்வத்தை புறக்கணித்து தம்மிஷ்டப்படி டட்லி சேனநாயக்க பிரகடனம் செய்த தன் விளைவாக தமிழரசுக் கட்சியைச் சார்ந்த திருச்செல்வம் அமைச்சர் பதவியை துறந்தது ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னைய வரலாறு.

கோணேஸ்வர ஆலயப் பகுதியை சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றியமைக்க இப்போது தொல்பொருள் திணைக்களம் முயன்று வருவதும், இரத்தினபுரியைச் சேர்ந்த சுமார் ஐம்பது சிங்கள வணிகர்களை இங்கு அனுமதியின்றி வியாபாரம் செய்ய அனுமதித்திருப்பதும் தொடரும் வேளையில் இங்கு விஜயம் செய்த அமைச்சர் நிர்மலா சீதாராமன் கோணேஸ்வர ஆலயத்தை புனரமைத்து கருங்கல்லால் நிர்மாணிக்க இந்திய அரசு உதவுமெனக் கூறியிருப்பது சிங்கள அரசுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும்.

அதேசமயம் திருமலையிலும் யாழ்ப்பாணத்திலும் ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா வங்கிக் கிளைகளையும் அமைச்சர் திறந்து வைத்துள்ளார். யாழ்ப்பாணம் செல்லும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ராஜதந்திரிகளும் இலங்கை அரசின் நினைவழிப்புச் சின்னமாக அமைந்திருக்கும் ஆசியாவின் மிகப் பெரும் நூலகமான யாழ்.பொது நூலகத்தைத் தரிசித்துச் செல்வது வழக்கம்.



சாம்பரிலிருந்து எழுந்த பீனிக்ஸ் பறவை போன்ற யாழ்.பொதுநூலகம் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக இருந்து வருகிறது.

நூலக எரிப்புக் கட்சியின் அடையாளமாக இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க. அமெரிக்கா, இந்தியா, சீனா என்ற எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கை சார்ந்து செல்லாது என்று அண்மையில் இவர் கூறியதை நிரூபிக்கும் வகையில் சீனக் கப்பலை அடுத்து இந்திய அமைச்சரின் வருகையை பார்க்க முடிகிறது. இதன் இன்னொரு பக்கமாக அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மகாநாடு அமைந்தது. தங்கள் கட்சியின் பலத்தை ஆள்தொகையால் எடுத்துக் காட்ட இதன் தலைவர்கள் முனைந்து வெற்றி கண்டனர். கடந்த பொதுத் தேர்தலில் கூண்டோடு சரிந்து வீழ்ந்த இக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, தேசியப் பட்டியல் எம்.பி. யானதால், கட்சிக்கு நாடாளுமன்றில் ஓர் ஆசனம் கிடைத்தது.

மக்கள் பேரெழுச்சியால் கோதபாயவும் அவரது சகோதரர்களும், அவர்களின் பிள்ளைகளும் பதவிகளைத் துறந்ததும், எவருமே ஏற்க மறுத்த பிரதமர் பதவியை ரணில் ஏற்றுக் கொண்டதும், அதன் வழியாக ஜனாதிபதியானதும் கடந்த வருடத்தின் முக்கிய அரசியல் நிகழ்வு.

கட்சியின் மாநாடு சுகததாஸ அரங்கில் இடம்பெற்ற போது இதன் முக்கியஸ்தர்களில் ஒருவரான அகில வஜிர காரியவாசம் யானைக்கதை (யானையே ஐக்கிய தேசிய கட்சியின் சின்னம்) ஒன்றைக் கூறி ஆதரவாளர்களை கவர்ந்திழுக்க முயன்றார்.

'விழுந்த யானை தானாக எழுந்து நடக்க ஆரம்பித்துள்ளது. இதனை எவராலும் தடுக்க முடியாது' என்பது இவரின் உரை.

இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு சொற்கள், "தானாக எழுந்து" என்பதும், "இனித்தடுக்கவே முடியாது" என்பதும் கேள்விக்குரியவை.

அகில வஜிர காரியவாசம் சொன்ன இதே கதையின் மூலம் வேறானது. 'மிருகங்களில் பலமானது யானை. ஆனால் அது வீழ்ந்தால் தானாக எழும்ப முடியாது. நான்கு பேர் தூக்கி விட்டால் தான் விழுந்த யானையால் எழும்ப முடியும்....' என்று இத்தொடர் நீள்கிறது.

இந்த மூலக்கதையே ஐக்கிய தேசிய கட்சிக்கு மிகப் பொருத்தமானது. விழுந்த யானையை (ஐக்கிய தேசிய கட்சி) கோதபாயவும், ராஜபக்சக்களும் தான் தூக்கி விட்டனர். இப்போதும் அந்த யானை அவர்களின் ஆதரவில் தான் நடமாடுகிறது. வருங் காலத்தில் வேறு கூட்டத்துடன் சேர்ந்து இயங்க முயல்கிறது. ஆனால் இதனால் ஒரு பொழுதும் தனியாக நடக்க முடியாது. அதற்கான கூட்டை உருவாக்குவதற்காக மற்றைய கட்சிகளை பிளவு படுத்தி வருகிறது என்பதே யதார்த்தம்.

இதன் படிமுறையாகவே ஒவ்வொரு கட்சியாக (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட) தனது பலத்தை இது பிரயோகித்து வருகிறது. இப்போது ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுனவில் எஞ்சி இருப்பவர்களையும் பிரித்தெடுக்கும் முயற்சியில் அதற்குள்ளிருந்தே ஒருவரை தெரிந்தெடுத்து செயற்படுத்தி வருகிறது. அமைச்சரவை நியமனங்களின்போது பெரமுனவில் இல்லாதவர்களுக்கு இடமளிப்பதுகூட அதே யுக்திதான்.

உள்ளூராட்சி தேர்தல்களை ரத்துச் செய்தவர், மாகாண சபை தேர்தல்களை மறுத்து வருபவர் ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டில் வைத்து அடுத்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் எனவும், அதற்கடுத்து நாடாளுமன்ற தேர்தல் எனவும் ஜனநாயக தேர்தல்களை முன்னறிவித்தார். 2025ல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்கள் என்றும் அறிவித்துள்ளார்.

இவரது அறிவிப்பை நம்பிய பல கட்சிகளும் அபேட்சகர் தெரிவு, தேர்தல் கூட்டு என்று அலைய ஆரம்பித்துள்ளன. பெரமுனகாரர்களுக்கு போதிய அமைச்சுப் பதவிகள் வழங்காது விட்டால் இந்த மாதம் 14ம் திகதி சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தை தாம் ஆதரிக்கப் போவதில்லையென பெரமுனவின் சிலர் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென பெரமுனவினர் ரணிலிடம் கோரப் போவதாகவும் செய்திகள் சொல்கின்றன.

இவை எதுவுமே ரணிலை அசையச் செய்யாது. அவர் சொன்னது போல ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என்பது கூட சந்தேகத்துக்குரியது. கட்சிகளை திசை திருப்பி அல்லாட வைப்பதற்காகவே தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

பெரமுனவினர் சொல்வது போல வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்காது அது தோற்கடிக்கப்படுமானால் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றம் கலைக்கப்படும். இடைக்காலத்துக்கு தமக்கு விருப்பமான ஓர் அமைச்சரவையை ஜனாதிபதி நியமிக்க சட்டத்தில் இடமுண்டு. ஆனால் ஜனாதிபதிப் பதவியில் மாற்றம் இருக்காது.

அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் எப்போது இடம்பெறுமென்று எவராலும் கூறமுடியாது. அந்தத் தேர்தலில் இப்போதுள்ள எம்.பிக்களில் எத்தனை பேர் வெற்றி பெறுவர் என்றும் நம்பிக்கையாகச் சொல்ல முடியாது. வரவு செலவுத் திட்டம் நிறைவேறுமானால் ரணில் நினைப்பவையே தொடர்ந்து இடம்பெறும். எனவே எதுதான் நடைபெற்றாலும் ரணிலுக்கு ஒன்றுதான். அது அவருக்கான வெற்றியானது.

எதிர்ப்பவர்கள் தலையில் மண்ணை அள்ளிக் கொட்ட யானை தயாராகிறது. விழுந்து கிடந்த தன்னை தூக்கி விட்ட பெரமுனவை பதம் பார்க்க அது ஆரம்பித்துள்ளது. வெற்றியும் தோல்வியும் ரணிலுக்கு ஒன்றே. அவர் பதவிக்கு உடனடியாக ஆபத்தில்லை. சூழ்ச்சி அரசியல் என்பது இதுதான்.

## பிரம்டன் தமிழ் ஒன்றியம் – கனடா
## வருடாந்தப் பொதுக்கூட்டம் 2023

பிரம்ரன் தமிழ் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் December மாதம் 10ம் திகதி (10-12-2023) ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணியிலிருந்து 9.00 மணி வரை 10150 The Gore Road- Brampton- ON L6P 0A6 இல் அமைந்துள்ள

Gore Medows Community Center & Library- Community Room #1இல் நடைபெறவுள்ளது. ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு ஒன்றியத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் இதுவரை அங்கத்துவத்தைப் புதுப்பிக்காத அங்கத்தவர்கள் மற்றும் புதிதாகஅங்கத்தவர்களாக இணையவிரும்பும் பிரம்ரன் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் தயவுசெய்து கீழுள்ள தொலைபேசி எண்ணுடன் அல்லது மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு. கொண்டு உரிய சந்தாப் பணத்தைச் செலுத்திப் பொதுக் கூட்டத்திற்கு முன்னர் அங்கத்தவர்களாகப் பதிவு செய்யுமாறும் அன்புடன் கேட்டுகொள்கின்றோம்.

பிற்குறிப்பு: வீட்டு முகவரி, தொலைபேசி எண், அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ள அங்கத்தவர்கள் தயவுசெய்து நிர்வாகத்திற்கு அறியத்தருமாறும் பிரம்ரன் தமிழ் ஒன்றியத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். நன்றி

**BTA. - (647) 873 0732**
**E-Mail: info@bramptontamil.ca**

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 நவம்பர் 2023 முதல் 10 நவம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பையா யோகரத்தினம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பையா யோகரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 04 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது மனைவி ஒரே தங்கை அவரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சுப்பையா யோகரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 27வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முத்தர் இரத்தினம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 27வது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் முத்தர் இரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 43வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சதாசிவம் சண்முகம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுன் றோட்டை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 43வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சதாசிவம் சண்முகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அமராவதி சண்முகம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுண் றோட்டை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவுநாள் 11 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி அமராவதி சண்முகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினம் தம்பிமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 11 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்

### திரு சுப்பிரமணியம் கந்தையா
### திருமதி பார்வதி கந்தையா




அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது சிரார்த்த தினம் 10 நவம்பர் 2023 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



04 நவம்பர் 2023 சனிக்கிழமை நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பையா யோகரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது மனைவி, ஒரே தங்கை அவரது குடும்பத்தினர் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.




04 நவம்பர் 2023 சனிக்கிழமை நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பையா யோகரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது மனைவி, ஒரே தங்கை அவரது குடும்பத்தினர் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 நவம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



06 நவம்பர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மயூரன் திவ்வியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் றித்விக் மயூரனின் ஐந்தாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் றித்விக் தனது பெற்றோர்கள், சகோதரன் றினோஸ் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



08 நவம்பர் 2023 புதன்கிழமை மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 27வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா தம்பதிகளது சிரார்த்த தினமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


## 5வது பிறந்த நன்நாள் வாழ்த்து



## செல்வன் றிக்வித் மயூரன்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி மயூரன் திவ்வியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் றிக்வித் மயூரனின் 5வது பிறந்த நன்நாள் 06 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் செல்வன் றிக்வித் தனது பெற்றோர்கள், சகோதரன் றினோஸ் மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை ஐந்து காணும் செல்வன் விக்வித் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 12வது ஆண்டாக நடாத்திய “ஊட்டும் கரங்கள்” இன்னிசை இரவு நிகழ்வு












# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக சிறப்பாக நடைபெற்ற 12வது ஆண்டு “ஊட்டும் கரங்கள்” இன்னிசை இரவு நிகழ்வு

கடந்த 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை ஸ்காபரோவில் அமைந்துள்ள Armenian Centre இல் நடை பெற்ற உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 12வது ஆண் டாக முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தை களுக்காக நடாத்தும் ஊட்டும்கரங்கள் நிகழ்வு சிறப் பாக நடைபெற்றது. .

விழா சரியாக 6.30 நிமிடத்துக்கு விழா அறிவிப்பாளர் திரு ஞானபண்டிதரின் சுந்தரத் தமிழோடு - திருமதி யசோதரா பரமேஸ்வரன், திருமதி சாருமதி மனோ காந்தன் திருமதி மணி திருவருட்செல்வன் (ராசன்) திருமதி சண்முகவடிவு பாலகுமாரன் திருமதி ரதி உதயகுமார் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி விழாவினை மங்களகரமாக ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து செல்வி அலனி ரவிச்சந்திரன் அவர்களால் தேவாரம் பாடப் பட்டது. கனடிய தேசிய கீதம் செல்வி தாமிரா சங்கர் அவர்களாலும் தமிழ் ஈழத்தில் உருவான தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை திரு உமைமாறன் சடையப்பசாமி அவர்களாலும் பாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திருமதி தாட்சாயினி பிறின்ஸ் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. விழாவின் சிறப்பு விருந்தினராக 2009 மே மாதம் நடைபெற்ற இறுதிக் கொடிய யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உயிர்களைக் காப்பாற்றியவரும் போரில் காய மடைந்தும் இராணுவ முகாம்களில் மாதக்கணக்கில் தடுத்து வைத்து சித்திரவதைக்கு உள்ளானவருமான டாக்டர் வரதராஜா அவர்கள் கலந்து கொண்டார். அவர் மேடைக்கு வரும் போது அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று பலத்த கை தட்டி வரவேற்றனர். அவர் தனது உரையில் இந்த அரங்கில் முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லம்... என்பதைக் காணுகின்ற போது கனடாவில் எமது தேசியத் தலை வரது எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கப்படுவதை நினைத்துப் பெருமை கொள்ளுகின்றேன். அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் தலை வரால் உருவாக்கப்பட்டது. அவருக்கு எத்தனை பாரிய வேலைகள், சுமைகள் இருந்தாலும் மாதத்தில் சில நாட்களை அந்தக் குழந்தைகளோடு செலவு செய்வதை நான் அவதானித்துள்ளேன். அவரது கனவு நனவாக பாடுபட்டு வரும் ஈழநாடு பத்திரிகைக்கு எனது பாராட்டுக்கள், உங்கள் ஆதரவு இந்தக் குழந்தைகளை வாழ வைக்கும் என்று தெரிவித்தார். டாக்டர் வரதராஜா என்ற பெயரில் ஒருவர் தன்னை இவராகக் காட்டித் திரிந்த போலி டாக்டர் ஒருவரது முகமூடி கிழிந்து தொங்கியது தெரிந்தது.

அதனைத் தொடர்ந்து கனடா மண்ணில் சமூக சமயப் பணியாற்றி வரும் கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலய குருசாமி சிவத் திரு சுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்களும், சமுகப்பணி, ஊர்ப்பணி என்பதோடு ஒரு மானிடனின் இறுதி நிகழ்வில் அவரின் குடும்ப உறுப் பினராகவே மாறி அந்திமச் சடங்குகளை எந்தவித பாகுபாடும் இன்றி ஒழுங்குபடுத்தி எந்தவித பிரதி உப காரத்தையும் எதிர்பாராமல் செய்து வரும் திரு சோம. சச்சிதானந்தன் அவர்களும் கனடா மண்ணில் 25 ஆண்டுகளாக இசைப் பணியாற்றி வரும் மெகா ரியூனஸ் இசைக்குழுவின் தலைவர் அன்புக்குரிய அர விந்தன் மகேசன் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் இருந்து வருகை தந்திருந்த பின்னணிப் பாடகர் முகேஷ் பின்னணிப் பாடகி சுர்முகி கனடித் தமிழ் பாடகர்கள் சபேசன், ரம்மியா, சரிகா ஆகியோரின் இன்னிசை மாலை சிறப்பாகப் பாடப்பட்டது. பழைய புதிய பாடல்களுடன் அரங்கில் இருந்தவர்களின் விருப் பப் பாடலையும் பாடி மகிழ்வித்தனர்.

அத்துடன் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடாவின் பெயரில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டிடத்திற்கான காசோலையை அரங்க த்தில் வைத்து ஈழநாடு பத்திரிகை ஆசிரியரிடம் வழங்கி னார்கள்.

இவ்வாண்டு நிகழ்வில் நடந்த ஒரு சில சம்பவங்களை மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக அரங்கம் மற்றும் ஒலி ஒளி அமைப்புக்கான செலவு 12,640.00வை கனடா வர்த்தகர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த சமூகப் பணியாளரு மான திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தானாக முன் வந்து ஏற்றுக் கொண்டார். அதே போன்று சிற்றுண்டி மற்றும் சிறப்பு உணவுகளை வழங்கிய நந்தா கேற்ரறிங் உரிமையாளர் திரு.ருபன் அவர்கள் அதற்கான 5000.00 டொலர்களை தனது பொறுப்பாக ஏற்றுக் கொண்ட தோடு வருடா வருடம் அன்பு இல்லக் குழந்தைகளு க்கான இது போன்ற தனது செயற்பாடு தொடரும் என்று உறுதியாகத் தெரிவித்தார்.

அதேபோன்று தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த பாடகர்களின் தங்குமிடம் உணவு மற்றும் வாகனப் போக்குவரத்துச் செலவுகள் 3500.00 டொலர் களை தமிழ் மக்கள் பணியாற்றி வரும் சமூக சேவை யாளர் திரு சங்கர் நல்லதம்பி (ஹோட்டல் சங்கர்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

அரங்கத்தில் அதிஷ்ட லாபச்சீட்டு மூலம் வெற்றி பெற்றவருக்கான லாப்டொப் இனை றொக்ஸ்சோஸ் மோகன் அவர்கள் அன்பளிப்பாக வழங்கி இருந்தார். அதேபோன்று ஏலத்தில் விடப்பட்ட தங்கச் சங்கிலியை அம்மா தங்க நகை அடைவு மாடத்தின் உரிமையாள ரும் எமது நிகழ்வுக்கு அனுசரனையும் ஆலோசனை யும் வழங்கி வருகின்ற திரு கிருஷ்ணகோபால் அவர் களும் விலை உயர்ந்த புடவையை பிரபல புடவை வியாபார நிலையமான ஆலயாஸ் நிறுவன உரிமை யாளர் திரு மஞ்சுதன் அவர்களும் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இவர்கள் மட்டுமல்ல சிறந்த நோக்கத்திற்காக நடத்த ப்படும் நிகழ்வுக்கு அனுசரனை வழங்கிய அனைத்து வர்த்தகத்துறை நண்பர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

என் இனிய வாசகர்களே! உறவுகளே!

இவர்களது வர்த்தகத்தை நாம் ஆதரிப்போராக இருக்க வேண்டும். அவர்களது தொழில்துறைகள் வளர்ச்சி அடைந்தால் மென்மேலும் அவர்களது உதவிகள் நமது சமூகத்திற்கு பயன்படும் என்பதை மறவாதீர்கள்.

மீண்டும் 2024 செப்டம்பர் மாதம் ஓர் ஊட்டும்கரங்கள் நிகழ்வில் சந்திப்போமாக.

நன்றியுடன் T.K. பரமேஸ் - ஆசிரியர் ஈழநாடு

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 12வது ஆண்டாக நடாத்திய "ஊட்டும் கரங்கள்" இன்னிசை இரவு நிகழ்வு




























# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஜயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.


**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**
25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**
26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
15-01-2024 திங்கட்கிழமை



**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.

**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# அம்மாக்களும் அப்புக்காத்துமாரும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த வாரம் வவுனியாவில் தங்களுக்கிடையே மோதிக் கொண்டார்கள். ஆளுக்காள் அடிபட்டு அதன் விளைவாக போலீஸ் நிலையம் வரை போயிருக்கிறார்கள். போலீசாரை சம்பவ இடத்துக்கு அழைத்ததும் அவர்கள் தான். எந்தப் போலீசுக்கு எதிராக இதுவரை காலமும் போராடினார்களோ அதே போலீஸிடம் போய் ஆளுக்காள் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.




இந்த மோதல் தொடர்பில் வடக்கு–கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.அந்த அறிக்கையில் மோதலைப் பற்றிய விளக்கம் உண்டு. ஆனால் அது முழுமையானதாக தெரியவில்லை.

தமிழர் தாயகத்தில் உள்ள எல்லாச் சங்கங்களையும் ஒருங்கிணைகின்ற எல்லாச் சங்கங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மையக் கட்டமைப்பு இல்லை. கடந்த 14 ஆண்டுகளாக சங்கங்களையும், தனித்தனிய அம்மாக்களையும் தனித்தனியாக பிரித்துக் கையாண்ட கட்சிகளும் புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் இந்த மோதல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்பட்ட ஆகப்பிந்திய வீழ்ச்சி அது.கடந்த 14 ஆண்டுகளாக எல்லாப் போராட்டங்களிலும் ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் முன்னணிப் படையாக நிற்பது அந்த அம்மாக்கள் தான்.கண்ணீரோடு மண்ணை அள்ளி வீசி அரசாங்கத்தைச் சபித்தபடி,எல்லாப் போராட்டங்களிலும் முன்னரங்கில் காணப்படுவார்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் நீதிக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பது இந்த அம்மாக்கள் தான். கட்சிகளோ குடிமக்கள் சமூகங்களோ அல்ல. கடந்த 14 ஆண்டுகளாக வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் இரண்டு குடில்களில் மிகச் சில அம்மாக்கள் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய போராட்டத்தை மக்கள் மயப்படுத்த அவர்களுக்கு தெரியவில்லை. மக்களும் அவர்களை நோக்கிச் செல்வது குறைவு. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். முழுத் தமிழ் மக்களுக்குமான போராட்டத்தின் உணர்ச்சிக் கூர்முனையாக அவர்களே காணப்படுகிறார்கள். அவர்கள் மத்தியில் கணிசமானவர்கள் மூப்பினாலும் களைப்பினாலும் ஏமாற்றத்தினாலும் நோய்களினாலும் இறந்து போய் விட்டார்கள். எனினும் விடாது போராடுகிறார்கள். அவர்களுடைய கண்ணீருக்குத் தமிழ் அரசியலில் ஒரு மகத்தான சக்தி உண்டு.கடந்த 14 ஆண்டு கால நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் உணர்ச்சிகரமான ஈட்டி முனையாக அவர்களே காணப்படுகிறார்கள். அதனால் தான் அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு கட்சிகளும் முயற்சிக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும்,தனிநபர்களும் முயற்சிக்கிறார்கள். அதனால் தான் அரசாங்கம் ஒரு முறை அவர்களை அவர்கள் பயணம் செய்த பேருந்துக்குள் அடைத்து வைத்து வெளியேற விடாமல் தடுத்தது. அவர்களை முரட்டுத்தனமாகக் கையாண்டது.

அதனால் தான் அமெரிக்க தூதுவர் அவர்களைச் சந்தித்து அவர்களோடு படமெடுத்து அதைத் தனது ருவிட்டர் பக்கத்தில் பிரசுரிக்கிறார். அமெரிக்கத் தூதர் மட்டுமல்ல, இலங்கைக்கு வரும் மேற்கத்திய ராஜதந்திரிகள் ஐநாவின் முக்கியஸ்தர்கள் போன்றோர் அந்த அம்மாக்களைச் சந்திக்காமல் செல்வது குறைவு. ஐநா கூட்டத் தொடரில் ஈழத் தமிழர்களுக்கான கண்ணீர் சாட்சியங்கள் அவர்கள் தான்.

அந்த அம்மாக்களின் சங்கங்களின் பொறுப்பில் இருப்பவர்கள் எல்லாரும் அரசியல் தெளிவுடையவர்கள் என்றில்லை. அந்த அம்மாக்களின் கண்ணீர் தான் அவர்களுடைய பலம். ஆனால் கண்ணீருக்கு அரசியல் தெளிவு இருக்க வேண்டும் என்று இல்லை. இது அந்த அமைப்புகளில் காணப்படும் பிரதான பலவீனம்.

அடுத்த பலவீனம், அவர்களுக்கு உதவி புரியும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தனி நபர்களும். அவர்கள் தான் உதவி புரிகிறார்கள் அவர்கள் தான் தொலை இயக்கியால் இந்த அமைப்புகளை கட்டுப்படுத்தவும் முயல்கின்றார்கள். மூன்றுக்கும் குறையாத புலம் பெயர்ந்த தரப்புக்கள் இந்த அம்மாக்களைத் தத்தெடுக்க முயற்சிப்பதாக அவதானிக்கப் பட்டுள்ளது.

அவர்களுடைய உதவிகள் இல்லையென்றால் கடந்த 14 ஆண்டுகளாக இந்த அம்மாக்கள் தொடர்ச்சியாகப் போராடியிருக்க முடியாது. அவர்களுடைய உதவிகள் இல்லையென்றால் இந்த அம்மாக்கள் ஐநா போன்ற உலக அவைகளுக்குச் சென்று தமது கண்ணீரைச் சாட்சியமாகக் கொடுத்திருக்க முடியாது. ஆனால் அவ்வாறு உதவி செய்யும் அமைப்புகளும் தனி நபர்களுமே இந்த அம்மாக்கள் பிரிந்திருப்பதற்கு ஒரு விதத்தில் காரணம். கட்சிகளும் காரணந்தான். சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் பேரவை பலமாக இருந்த காலகட்டத்தில் இந்த அம்மாக்களின் சங்கங்களை ஒற்றுமைப்படுத்த முயற்சித்தது. முடியவில்லை.சில குடிமக்கள் சமூகங்கள் முயற்சித்தன. முடியவில்லை. எனினும், வெளிநாட்டுத் தூதுவர்களுடான சந்திப்புகளின் போது சில சிவில் செயற்பாட்டாளர்கள் இந்த அம்மாக்களுக்கு உதவுவதுண்டு. ஆனால் எந்த ஒரு குடிமக்கள் சமூகத்தாலும் இந்த அம்மாக்களின் சங்கங்களை கட்டுக்கோப்பான ஐக்கிய அமைப்பாக திரட்டியெடுக்க முடியவில்லை.

கடந்த 14ஆண்டுகளாக தமிழ்மக்கள் மத்தியில் போராட்டத்திற்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்கமுடியாத கட்சிகளும், தாயக அரசியலில் நிர்ணயகரமான விதங்களில் தலையிட முயற்சிக்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் இந்த அம்மாக்களை எப்படித் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று எத்தனிக்கின்றன. போராடத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க முடியாத மேற்கண்ட தரப்புகள் உணர்ச்சிகரமாக எப்பொழுதும் போராட்டத் தயார் நிலையில் காணப்படும் அம்மாக்களைத் தயார் நிலை முன்னணிப் போராளிகளாகப் பார்க்கின்றன. எனவே அவர்களைத் தத்தெடுக்க முயற்சிக்கின்றன. அவர்களாலும் கட்டமைப்புகளை உருவாக்க முடியவில்லை, உணர்ச்சிகரமான ஒரு பொது அடித்தளத்தில் ஓரளவுக்கு அமைப்பாகக்கூடிய அம்மாக்களையும் ஐக்கியப்பட விடுகிறார்கள் இல்லை. அதன் விளைவாகவே அம்மாக்களை கட்டுக்கோப்பான ஒரு மையக் கட்டமைப்புக்குள் கொண்டு வர முடியவில்லை.

வவுனியாவில் ஏற்பட்ட மோதல்களின் பின்னணியிலும் புலம்பெயர்ந்த நபர்கள் சிலர் உண்டு என்று அம்மாக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். வவுனியா மோதலுக்குக் காரணம் கொள்கை முரண்பாடு அல்ல. கொள்கை ரீதியாக அந்த அம்மாக்களுக்கிடையே முரண்பாடுகள் கிடையாது. அந்த முரண்பாடுகளின் தோற்றுவாய் சில புலம்பெயர்ந்த தமிழர்கள் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது தமிழ்த் தேசியப் பரப்புக்குள் ஏற்பட்ட ஒரு முரண்பாடு அகமுரண்பாடு. இதனைப் பகை முரண்பாடு ஆக்காமல் நேச முரண்பாடாக அணுகியிருந்திருக்க வேண்டும். அல்லது அது பகை முரண்பாடாக மாறுவதை தடுத்து இந்த அம்மாக்களை ஒரு கட்சியோ சிவில் அமைப்போ ஐக்கிய படுத்தியிருந்திருக்க வேண்டும்.ஆனால் தங்களுக்கு இடையே ஐக்கியபட முடியாத கட்சிகளும், கட்சிகளை ஐக்கியப்படுத்த முடியாத குடிமக்கள் சமூகங்களும் இந்த வயோதிப அம்மாக்களை எப்படி ஐக்கியப் படுத்தும்?

தமிழ்த் தேசிய அரசியலானது அக முரண்பாடுகளைக் கையாளும் பக்குவம் குறைந்தது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம் இது. மற்றொரு உதாரணம், அண்மையில் இடம் பெற்றது. அம்மாக்கள் சண்டை போடுவதற்கு சில நாட்களுக்கு முன் நடந்தது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சுமந்திரன் ஓர் ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் சம்பந்தர் ஓய்வு பெற வேண்டும் என்று கேட்டிருந்தார். முதுமை காரணமாக சம்பந்தர் இயலாதவர் ஆகி விட்டார் என்பதனால் அவர் ஓய்வு பெற வேண்டும் என்று சுமந்திரன் அந்த நேர்காணலில் கூறியிருக்கிறார். கட்சியின் மிக மூத்த தலைவரைப் பற்றி அடுத்த நிலைத் தலைவர் ஒருவர் அவ்வாறு பகிரங்கமாகக் கூறுவது எதைக் காட்டுகிறது? அது ஓர் உட்கட்சிப் பிரச்சினை. அதை ஏன் அவர் பகிரங்கமாக கூற வேண்டி வந்தது?

ஏற்கனவே கூட்டமைப்பாக இருந்தது படிப்படியாக உடைந்துடைந்து வந்து இப்பொழுது தமிழரசுக் கட்சியாகச் சுருங்கிப் போய் விட்டது. இபொழுது அக்கட்சி தனக்குள்ளேயும் மோதத் தொடங்கி விட்டதா? தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்று போட்டிதான் அதற்கு காரணம். அது எல்லா கட்சிகளுக்குள்ளும் ஏற்படும் ஜனநாயகப் போட்டி. அதில் சுமந்திரனும் சிறீதரனும் போட்டியிடக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. சி.வி.கே.சிவஞானத்துக்கும் விருப்பம் உண்டு.

ஆனால் மாவையும் சம்பந்தரும் தேர்தலை வைக்கிறார்கள் இல்லை. அரசாங்கம் தேர்தல்களை வைக்கவில்லை என்று கேட்கும் ஒரு கட்சி,தன்னுடைய தலைமைக்கான தேர்தலை ஒத்திவைத்து வருகிறது. அதன் விளைவாக கட்சியின் அடுத்த நிலைத் தலைவர் ஒருவர் உட்கட்சி விவகாரத்தை பொதுவெளியில் வைத்துப் பேசியிருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவை மேற்கண்ட இரண்டு உதாரணங்களும் நமக்குக் காட்டுகின்றன. தங்களுக்கிடையே தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை பொது வெளிக்குக் கொண்டு வந்து, தங்களையும் கீழ்மைப்படுத்தி, தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தையும் பலமிழக்கச் செய்யக் கூடியவைகளாக மேற்படி சம்பவங்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பலமான தேசிய இயக்கம் இல்லாத வெற்றிடத்தில் தான் இவ்வாறான மோதல்கள் ஏற்படுகின்றன.மூத்த,பாரம்பரியம் மிக்க ஒரு கட்சியின் அப்புக்காத்துமாரும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட முதிய அம்மாக்களும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இனவெறிக் கூச்சலும் மன்னிப்புக் கோரலும்

மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் ஒரு மதகுருவிடம் இருக்க வேண்டிய பண்புகளுடன் பொதுவெளியில் நடந்து கொள்வதில்லை என்பதை ஏற்கெனவே நடந்தேறிய ஒன்று இரண்டு அல்ல பல்வேறு சம்பவங்கள் மூலமாக நாமெல்லோரும் அறிவோம்.

வணக்கத்துக்குரியவராக இருக்க வேண்டிய தேரர் பெருமளவுக்கு சர்ச்சைக்குரியவராகவே பொதுவில் அறியப்பட்டிருக்கிறார். அவரது அட்டகாசங்களும் ஆவேசப் பேச்சுக்களும் மகா சங்கத்துக்கே பெரும் அவமானம் என்பது குறித்து பௌத்த உயர்பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அழைத்து அறிவுறுத்தியிருந்தால் அவர் தொடர்ந்தும் பண்பில்லாத முறையில் நடந்துகொள்வதை தவிர்த்திருக்கவும் கூடும். அல்லது அத்தகைய ஒரு 'அட்டகாசமான 'தேரர் இன உறவுகளைப் பொறுத்தவரை உணர்ச்சிபூர்வமான ஒரு பிரதேசத்தில் இருக்க வேண்டியது அவசியம் என்று அவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் சுமணரத்ன தேரர் மட்டக்களப்பில் நடுவீதியில் பொலிசாரும் பார்த்துக் கொண்டிருக்க தென்னிலங்கையில் வாழும் தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டிக்கொலை செய்வேன் என்று ஆவேசத்தின் உச்சியில் கூச்சலிட்டதை நாமெல்லோரும் காணொளியில் பார்க்கக் கூடியதாக இருந்தது.

அந்தக் 'கொலைப்பேச்சு' அவர் வெளிச்சத்துக்கு கொண்டு வர முயற்சித்த பிரச்சினை எதுவாக இருந்தாலும், அவரின் அணுகுமுறையில் இனவெறியைத் தவிர வேறு எந்த தர்க்கநியாயமும் இருந்திருக்கும் என்று நம்புவதற்கு இடந் தரவில்லை.

இனங்களுக்கு இடையில் வன்முறையைத் தூண்டி விடக்கூடிய பேச்சுக்களை விடவும் பாரதூரமான வெறுப்புப் பேச்சு இருக்கமுடியாது. ஆனால், அவர் அதனை நீண்டகாலமாக சர்வ சாதாரணமாகச் செய்து கொண்டு வந்திருக்கிறார். அதனால் எந்தப் பிரச்சினையையும் அவர் எதிர்நோக்கவில்லை. இந்த தடவையும் அவ்வாறே அவருக்கு எந்த பிரச்சினையும் இருக்கவில்லை.

அவரைப் போன்று வேறு மதங்களைச் சேர்ந்த ஒரு குருவானவர் செய்திருந்தால் பொலிசார் எந்த விதமாக நடந்திருப்பார்கள் என்பதை சொல்லித் தான் எவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றில்லை.



சுமணரத்ன தேரரின் பேச்சு குறித்து அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததைக் கண்டித்து தமிழ் அரசியல் தலைவர்கள் குரலெழுப்பிய போதிலும் அரசாங்கத் தரப்பில் அதற்கு பதில் கூறப்படவேயில்லை. அது மாத்திரமல்ல, தேரரின் அட்டகாசம் குறித்து சிங்கள அரசியல்வாதி எவரும் ஆட்சேபம் தெரிவித்ததாக செய்தி வந்ததாக இல்லை.

ஆனால் திடீரென்று சுமணரத்ன தேரர் தனது அந்த 'கொலைப் பேச்சுக்காக' தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்டு உரையாற்றும் காணொளியொன்று வெளியிடப்பட்டது. அவரது ஆவேசப் பேச்சு சட்ட நடவடிக்கை எடுக்காமல் சாதாரணமாக அலட்சியம் செய்து விடக்கூடியது அல்ல என்று அவருக்கு அரசாங்கத் தரப்பில் இருந்தோ அல்லது மகாசங்கத்திடமிருந்தோ கூறப்பட்டிருக்கக் கூடும். அத்தகைய ஒரு பின்னணியில் தான் அவரது மன்னிப்புக் கோரல் வந்திருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

தமிழ் மக்கள் எளிதில் மறந்துவிடவோ மன்னித்து விடவோ கூடியது அல்ல சுமணரத்ன தேரரின் பேச்சு. அவ்வாறானால் எவரும் இனங்களுக்கு இடையிலும் மதங்களுக்கு இடையிலும் வன்முறையை தூண்டி விடக்கூடிய ஆவேசப்பேச்சுக்களை நிகழ்த்தி விட்டு மறுநாள் ஒரு காணொளியில் அல்லது ஊடக அறிக்கையில் மன்னிப்புக் கேட்டு விட்டால் எல்லாம் சரியாகிப் போய்விடும் என்றாகிறது. இது மிகவும் தவறான ஒரு உதாரணமாக வந்துவிடும்.

கிழக்கில் உருவான சர்ச்சைக்காக தென்னிலங்கையில் வாழும் தமிழர்களை எல்லாம் துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்யப் போவதாக அவர் விடுத்த அச்சுறுத்தல் நாடு பூராவும் இனங்களுக்கு இடையில் பதற்ற நிலையை தோற்றுவிக்கக 'கூடிய ஆபத்தைக் கொண்டிருந்தது. அது குறித்து கண்டனம் செய்த தமிழ் அரசியல் தலைவர்கள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல் என்று சுட்டிக் காட்டினார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பொலிஸ்மா அதிபருக்கு அது குறித்து கடிதமும் எழுதியிருந்தார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை ( International Covenant on Civil and Political Rights — ICCPR ) என்பது 1966 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஒரு சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையாகும்.

அதை இலங்கை 1980 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது. ஆனால் அது தொடர்பிலான சட்டம் 27 ஆண்டுகள் கழித்து 2007ஆம் ஆண்டில்தான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டம் என்று அழைக்கப்படும் இந்த சட்டம் பாரபட்சத்தை, பகைமையை அல்லது வன்முறையை தூண்டிவிடும் வகையில் அமையக்கூடியதாக போர் அல்லது தேசிய, இன,மத வெறுப்புணர்வை பிரசாரப்படுத்துவதை குற்றச் செயலாகக் கருதுகிறது. அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்படக்கூடிய எவரையும் மேல் நீதிமன்றத்தைத் தவிர அதற்கு கீழ் நிலையில் உள்ள எந்த நீதிமன்றமும் பிணையில் விடுவிக்க முடியாது. ஆனால், அந்த சட்டம் வியாக்கியானப்



படுத்தப்படுகின்ற அல்லது பிரயோகிக்கப் படுகின்ற விதம் அரசாங்கங்கள் எதிர்க் கருத்துக்களைக் கொண்டவர்களை அடக்குவதற்கும் சிறுபான்மை இனத்தவர்களை கொடுமைப்படுத்துவதற்கும் தவறாக பயன் படுத்தப்படுகிறதே தவிர உண்மையில் அதன் மூலமாக தண்டிக்கப்படக் கூடிய குற்றச்செயல்களைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களினால் முன்வைக்கப்படுகிறது. இனக்கலவரம் மூளும் என்று எச்சரிக்கை செய்வதை விடவும் நாட்டு மக்களில் ஒரு பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரை தூண்டிவிடும் மோசமான செயல் வேறு என்னதான் இருக்கப்போகிறது?

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு தனக்கு இருக்கும் விருப்பத்தை இவ்வருட முற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட போது அவ்வாறு செய்ய முயன்றால் இலங்கை இதுகால வரையில் கண்டிராத படுமோசமான இனக் கலவரம் வெடிக்கும் என்று முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்சவும் சரத் வீரசேகரவும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அடிக்கடி கூறினார்கள். அவர்களுக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வேண்டுமானால் அவ்வாறு இனக்கலவர எச்சரிக்கையை அவர்கள் மீண்டும் வெளியிடுவதற்கும் கூட தயங்கப் போவதில்லை என்கிற அளவுக்கே நாட்டில் இன உறவுகள் தொடர்பிலான நிலைவரம் இருக்கிறது.

இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் குரோதத்தை தூண்டி விடக் கூடியவை என்று கருதப்படும் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக அண்மைக் காலத்தில் அரசாங்கம் எடுத்த சில சட்ட நடவடிக்கைகளை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

முதலாவதாக, தலதாமாளிகையை இழிவு படுத்தும் வகையில் யூரியூப் மூலமான தனது கிரமமான நிகழ்ச்சிகளில் கருத்துக்களை வெளியிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட சமூக ஊடகச் செயற் பாட்டாளரான சேபால் அமரசிங்க கடந்த வருடம் டிசம்பரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பௌத்தர்களின் மத உணர்வுகளை புண்படுத்திய தனது செயலுக்காக அமரசிங்க மகாநாயக்க தேரர்களிடம் மன்னிப்புக் கேட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இரண்டாவதாக, கிறிஸ்தவ மதப்போதகரான ஜெரோம் பெர்னாண்டோ கடந்த மேமாதம் பௌத்த மதத்தை மாத்திரமல்ல, இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களையும் இழிவுபடுத்தும் கருத்துக்களை வெளியிட்டு பிரசங்கம் செய்த காணொளி சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து பெரும் சர்ச்சை மூண்டது. ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவிட்ட போதிலும் தனக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்படுவதற்கு முன்னதாகவே பெர்னாண்டோ நாட்டிலிருந்து வெளியேறி விட்டார். இன்றுவரை அவர் திரும்பி வரவில்லை.

மூன்றாவதாக, கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பின் பிரபலமான பெண்கள் கல்லூரி ஒன்றில் இடம்பெற்ற 'ஏப்ரல் முட்டாள்தினச் சவால் ' என்ற நிகழ்ச்சியில் நகைச்சுவை மேடைப் பேச்சாளரான நடாஷா எதிரிசூரிய என்ற இளம் பெண் கலைஞர் புத்தபெருமானின் குழந்தைப் பராயத்தைக் கிண்டல்செய்யும் தொனியில் கருத்துக்களை தெரிவித்த காணொளிப் பதிவும் சமூக ஊடகங்களில் வெளியானது.

அதை தொடர்ந்து மூண்ட சர்ச்சைக்கு மத்தியில் நடாஷா வெளிநாடு செல்வதற்கு முயற்சித்தபோது விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சில வாரங்கள் கழித்து அவரும் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நான்காவதாக, சமூக ஊடகங்களில் பிரபல்யமானவர் என்றும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளியிடுபவர் என்றும் அறியப்பட்ட ராஜாங்கன சித்தார்த்த தேரர் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் அமைதியின்மையை தூண்டி விடக் கூடிய முறையிலும் குறிப்பிட்ட சிலரை அச்சுறுத்தும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டதாக அவருக்கு எதிராக வேறு ஒரு பிக்கு செய்த முறைப்பாட்டையடுத்து இவ்வருட நடுப்பகுதியில் கைதாகி பல வாரகால விளக்கமறியலுக்கு பிறகு விடுவிக்கப் பட்டார்.

இந்த சம்பவங்களின்போது வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராக தென்னிலங்கையில் பரவலாக குரல்கள் கிளம்பின. ஆனால், தமிழர்களை துண்டு துண்டாக வெட்டிக்கொலை செய்வேன் என்ற மட்டக்களப்பு விகாராதிபதியின் இன (22ம் பக்கம் பார்க்க)

# சீனாவில் இருந்து மீன் இறக்குமதி! யோசனையும் அதிலுள்ள பேராபத்தும்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



யாழ் வடமாராட்சி மீனவர்கள் சம்மேளனம் அண்மையில் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தது. அதாவது சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் யோசனையை கை விடுங்கள். அதனால் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அத்துடன் காலப் போக்கில் எங்களுடைய உள்ளூர் மீன் பிடியே இல்லாமல் போய்விடும்.

சீனா அண்மைக் காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்ப ிடித் துறையின் மீது அதிக ஈடுபாட்டை காண்பித்து வருகின்றது. பொருளாதார நெருக்கடியால் மீனவர்கள் தொழில்களை இழந்திருந்த சந்தர்ப்பங்களில், மீனவர்களுக்கு உலர் உணவுகளை வழங்கியது அத்துடன், இலவசமாக டிசல் வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது.

சீனா திடீரென்று ஏன் வடக்கு கிழக்கு மீனவர்கள் மீது அக்கறை காண்பிக்கின்றது? இந்தக் கேள்விக்கு எவரிடமும் பதில் இருக்கவில்லை. ஆனால் இப்போது அந்த பதில் கிடைத்திருக்கின்றது. நீண்டகால நோக்கில் வடக்கு கிழக்கின் மீன்பிடித்து துறைக்குள் உள் நுழையும் நோக்கத்துடன்த ான். சீனா மீனவர்கள் பக்கம் திரும்பியிருக்கின்றது.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவில் இடம் பெற்ற ஒரு பட்டி — ஒரு வலயம் மகாநாட்டில் பங்கு கொண்டிருந்தார். இதன் போது, ஜனாதிபதியுடன் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சென்றிருந்தார். இதன் போது, சீனாவின் ஒரு பட்டி — ஒரு வலயம் திட்டத்தின் கீழ், 1500 மில்லியன் ரூபா முதலீட்டை, வடக்கு கிழக்கு மீன்பிடித்து துறையில் செய்யவுள்ளதாக சீனா வாக்குறுதியளித்திருந்தது. இவ்வாறானதொரு பின் புலத்தில் தான் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் ஆலோசனையும் வெளிப்பட்டிருக்கின்றது. வடமாராட்சி மீனவர்கள் சம்மேளணத்தின் அறிக்கையின்படி, இந்த விடயத்தில் கடற்தொழில் அமைச்சர் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

வடக்கில் கடலட்டை பண்ணைகள் பெருகிய போது, அதனால் உள்ளூர் மீன் பிடித் துறை நீண்டகாலத்தில் பாதிக்கப்படும் என அபிப்பிராயங்கள் முன் வைக்கப்பட்டன. மீனவர்கள் மத்தியிலிருந்தும் கடுமையான எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறான எதிர்ப்புக்களையும் மீறியே கடலட்டைப் பண்ணைகள் பெருகின. கடல் உயிரியல் மற்றும் சுற்றுச் சூழலியல் நிபுனர்களின் கருத்தின்படி கடலட்டை பண்ணைகளின் பெருக்கம் நீண்டகால அடிப்படையில் உள்ளூர் மீன்பிடியை வலுவிழக்கச் செய்யும் காலப் போக்கில் உள்ளூர் மீன்பிடியே இல்லாமலும் போகலாம் என்று கூறகின்றனர். இவ்வாறான கடலட்டை பண்ணைகள் அதில் முதலீடு செய்யும் சிலருக்கு மட்டுமே நன்மையளிக்கும்.

தற்போது அவ்வாறான எதிர்வு கூறல்கள் உண்மையாகிவருகின்றனவா என்னும் கேள்வி எழுகின்றது. ஏனெனில் சீனாவிலிருந்து உள்ளூர் நுகர்விற்காக, மீன்களை இறக்கு மதிசெய்யும் யோசனை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. இலங்கை ஒரு வளமுள்ள கடல் பகுதியை கொண்டிருக்கும் நாடு. இவ்வாறானதொரு நாட்டில் உள்ளூர் மீன் தேவைகளுக்காக சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய முற்படுவதானது அடிப்படையிலேயே தவறான பொருளாதார அணுகுமுறைகளின் விளைவாகும்.

மீன்களை ஏற்றுமதி செய்வதில் சீனா முன்னணி வகிக்கும் நாடு ஆனால்



சட்டவரம்புகளை மீறி, மீன்களை பிடிப்பதில் முன்னணி வகிக்கும் நாடும் சீனாதான். சர்வதேச மீன்பிடி நியமங்களை வரையறைக்கும் ஐ.யு.யு வின் ((Illegal> unregulated and Unreported (IUU) கணிப்பின்படி, மீன்பிடியில் சீனா ஒரு மோசமான நாடாகும். அமெரிக்க காங்கிரஸ் சேவைகள் அறிக்கையின்படி, மீன்பிடி கப்பல்களை கையாளுவதில் சீனா ஒரு சடவிரோத நடாகும். அதே வேளை உலகிலேயே இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காக மீன்பிடிக் கப்பல்களை பயன்படுத்தும் ஒரேயொரு நாடும் சீனாதான். இந்த அடிப்படையில் நோக்கும் போது, சீனா அதன் பொருளாதார அணுகுமுறையில் சர்வதேச சட்டவிதிகளை பெருமளவில் பொருட்படுத்துவதில்லை என்பது தெளிவாகின்றது.

உலகில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான ஆயுத அமைப்பொன்றை வைத்திருக்கும் ஒரேயொரு நாடும் சீனா மட்டும்தான். இந்தப் பின்புலத்தில் தான் சீனாவின் கப்பல்கள் இலங்கையில் நங்கூரமிடப்படும் போது, பாதுகாப்பு கரிசனைகள் அதிகரிக்கின்றன. இந்திய ஊடகங்கள் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துகின்றன. சீனாவின் மீன்பிடி நடவடிக்கைள் அனைத்துமே, குறித்த மீன்பிடி இராணுவ கட்டமைப்பினால் தான் தீர்மானிக்கப்படுகின்றது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களின் விலை, ஒப்பீட்டடிப் படையில் குறைவானது. இதன் காரணமாகவே பல ஆபிரிக்க நாடுகள் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்கின்றன ஆனால் தற்போது காலப்போக்கில் முற்றிலுமாக சீனாவில் தங்கியிருக்கும் நிலை ஏற்படலாம் என்னும் அச்சத்தினால் ஆபிரிக்க நாடுகள் சீனாவிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன.

இதற்கு கிழக்காபிரிக்க நாடான கென்யா ஒரு சிறந்த உதாரணமாகும். உள்ளூர் நுகர்வுக்காக சீனாவிலிருந்து, அதிகளவில் மீன்களை இறக்குமதி செய்யும் நாடாக கென்யாக இருந்தது. ஆனால் 2021இல், உள்ளூர் மீன்பிடித் துறையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சீனாவிலிருந்து, மீன்கள் இறக்குமதி செய்வதற்கு தடைவிதித்தது.

2018இல், இந்த தீர்மானத்தை எடுத்த போது, ஒரு புகையிர பாதை நிர்மானத் திட்டத்திற்கான நிதியை நிறுத்தி விடுவதாக சீனா எச்சரித்தது. கடனுதவின் இறுதிப் பகுதியை விடுவிக்கும் உடன் பாட்டிலிருந்தும் வெளியேறியது. இது ஒரு சிறந்த உதாரணம். சீனாவுடனான, ஒப்பந்தங்களிலிருந்து, ஒரு நாடு வெளியேற முற்படும் போது, சீனா எவ்வாறு கடனுதவிகளை அச்சுறுத்தும் ஆயுதமாக பயன்படுத்துகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

இதற்கப்பால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களின் தரமும் சந்தேகத்துக்கு உரியதாகவும், கென்ய அரசாங்கத்தினால் இனம்காணப் பட்டது. மீன்கள் ஏற்றுமதிக்காக பதனிடப்படும் போது, பின்பற்ற வேண்டிய உலக சுகாதார நிறுவனத்தின் தராதரங்கள் சரியாக பின்பற்றப்படவில்லையென்று, கிழக்காபிரிக்க ஆய்வு கூட தெரிவுக்குழு இனம் கண்டது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப் படும் மீன்களின் பாகங்களை ஆய்வு செய்த, நைரோபி பல்கலைகழக்கத்தின், பொது சுகாதார, மருந்தியல் மற்றும் நச்சியல் துறையின் தலைவர், பேரசிரியர் ஜேம்ஸ் மபரியா இவ்வாறு கூறுகின்றார். சீன மீன்களில் உலோகத்தின் கூறுகள் இருக்கின்றன, இவ்வாறான மீன்களை தொடர்சியாக உட்கொள்ளும் போது, அது மனித உடலை பாரதூரமாக பாதிக்கும் என்கிறார் மபரியா.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் உள்ளூர் மீன் நுகர்விற்கு இறக்குமதி செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை. ஆனாலும் சீனாவிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்யும் யோசனை முன் வைக்கப்படுகின்றதென்றால், அந்த ளவிற்கு சீனா அதன் பிடியை இலங்கையில் இறுக்கிக் கொண்டு செல்கின்றது என்பதே பொருள். சீனாவின் சந்தைக்கான கடலட்டைகளை உள்ளூரில் ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபம் சீனா, மறுபுறமாக அதன் விளைவாக உள்ளூர் மீன்பிடி பாதிக்கப்படும் போது, உள்ளூர் நுகர்விற்காக சீனாவின் மீன்களை இறக்குமதி செய்ய தூண்டுகின்றது.

வடக்கு கிழக்கின் மீன் நுகர்வு தேவைகளுக்காக சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் யோசனையானது அடிப்படையிலேயே தவறானது. இது நிச்சயம் உள்ளூர் மீன்பிடியை முற்றிலுமாக இல்லாமலாக்கும். அடுத்து, மீன்பிடித் துறைக்குள் சீனாவின் ஊடுருவல் அதிகரிக்கும் போது, காலப்போக்கில் உள்ளூர் தேவைகளுக்காக முற்றிலும் சீனாவில் தங்கியிருக்கும் நிலைமையும் உருவாகும். தமிழ் தேசியவாத அரசியல் வாதிகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் இந்த விடயத்தில், தீவிர கவனம் செலுத்த வேண்டும். மீனவர்களின் அச்சம் மிகவும் நியாயமானது. வடக்கு கிழக்கின் உள்ளூர் மீன் தேவைகளுக்காக சீனாவிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படும் திட்டத்தால் வடக்கு கிழக்கின் மீன்பிடியே நீண்டகால அடிப்படையில் இல்லாமல் போகும்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# புறக்கணிக்கப்படும் இந்திய கரிசனை

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி, சீனாவின் ஷியான் -6 என்ற ஆய்வுக் கப்பல், கொழும்புத் துறைமுகத்தில் தரித்து, இலங்கை கடல் எல்லைக்குள் ஆய்வுகளையும் நடத்தி விட்டு திரும்பியிருக்கிறது. அண்மைக் காலத்தில் இந்தியாவுக்கு கிடைத்திருக்கின்ற இராஜதந்திர பின்னடைவுகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

கடந்த வாரம் இந்தியாவின் 'தி வயர்' என்ற ஆங்கில ஊடகத்தில், உலக அரங்கில் இந்தியாவின் நடத்தை அதன் நலன்களுக்கு உதவவில்லை என்ற தலைப்பில் வெளியான ஒரு கட்டுரையில், அண்மைக்காலத்தில் இந்தியா எதிர் கொண்ட பின்னடைவுகள் சில பட்டியலிடப்பட்டிருந்தன.

காஸா வன்முறையை நிறுத்தக் கோரி ஐ.நா பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது இந்தியா வாக்களிக்காமல் தவிர்த்தமை, மாலைதீவின் புதிய ஜனாதிபதி அங்கிருந்து இந்தியப் படையினரை வெளியேற்றுமாறு கேட்டுக் கொண்டமை, எட்டு இந்திய கடற்படையினருக்கு கட்டாரில் மரணதண்டனை விதிக்கப்பட்டமை, சீனாவுடனான எல்லைப் பேச்சுக்களை முடிக்கவுள்ளதாக பூட்டான் அறிவித்திருப்பது, 2024 வரை இந்தியர்களுக்கான விசா கட்டுப்பாடுகளை தளர்த்துவதில்லை என கனடா முடிவெடுத்திருப்பது போன்ற பின்னடைவுகளுடன் ஒன்றாக, இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி சீன கப்பல் இலங்கையில் தரித்துச் சென்றதையும் ஒரு பின்னடைவாக குறிப்பிட்டிருக்கிறார் ஆகர் பட்டேல் என்ற பத்தி

எந்த முடிவையும் தமது அரசாங்கம் எடுக்காது என்று வாக்குறுதி கொடுக்கிறார்.

கொழும்பு திரும்பிய பின்னர், சீனாவின் ஷியான் 6 கப்பலுக்கு அனுமதி அளிக்கிறார். இந்தக் கப்பல் விவகாரத்தில் இந்தியாவை நம்ப வைத்து அவர் கழுத்தறுத்து விட்டார் என்றே கூறலாம்.



சீன கப்பலுக்கு அனுமதி அளிக்கப்பட்டது எல்லாம் எப்போதோ முடிந்து விட்ட காரியம். ஆனால், கடைசி வரையில், அதாவது ஒக்டோபர் 25ஆம் திகதி காலை வரை அது பற்றி அதிகாரபூர்வமாக தகவல் வெளியிடுவதை அரசாங்கம் தவிர்த்துக் கொண்டது.

அன்று காலையில் சீனக் கப்பல் விநியோகத் தேவைகளுக்காக கொழும்பு துறை

சென்றிருப்பது இந்தியாவுக்கு கூடுதல் கவலையை கொடுத்திருக்கிறது.

சீனாவைப் பொறுத்தவரையில் இந்த விவகாரத்தில் சத்தமில்லாமல் சாதித்திருக்கிறது என்று தான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால், இந்தியாவின் எதிர்ப்பை மீறி இலங்கையில் தனது கப்பலை நிறுத்திக் காட்டியிருப்பதுடன், இலங்கை கடற்பர

ப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதை முற்றாக தடுக்க முடியாது என்ற செய்தியையும் சீனா எடுத்துக் கூறியிருக்கிறது.

நெருக்கடி காலத்தில் 4 பில்லியன் டொலர்களை கொடுத்து உதவியும் இந்தியாவினால் சீனக் கப்பலின் வருகையை தடுக்க முடியாமல் போனது அதற்குப் பெரும் ஏமாற்றம். இந்தியா தனது உத்

அம்பாந்தோட்டையில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவுள்ளது. இங்கு எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு போட்டியில் இருந்த சிங்கப்பூர் நிறுவனம் விலகிய பின்னர், சீன நிறுவனம் மட்டுமே எஞ்சியிருப்பதால் அதனுடன் அடுத்த சில வாரங்களுக்குள் பேச்சுக்களை நடத்தி உடன்பாடு செய்து கொள்ளப்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறியிருக்கிறார்.

இலங்கையில் சீனா தனக்கென பல அடையாளச் சின்னங்களை வைத்திருக்கிறது. பொருளாதார முதலீடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட அந்த அடையாளச் சின்னங்களுடன் புதிதாக இந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமும் சேர்ந்து கொள்ளவுள்ளது.

இவ்வாறான நிலையில் சீனாவை உதறித் தள்ளவோ, உதாசீனம் செய்யவோ முடியாத நிலை இலங்கைக்கு காணப்படுகிறது. இந்தியாவின் கவலைகளை பொருட்படுத்தாமல் செயற்பட வேண்டிய நிலை இதனால் ஏற்படுகிறது.

அதேவேளை, சீனாவுக்கு வழி விட்டுக் கொடுத்தாலும் இந்தியாவையும் சமாளிக்கும் உத்திகளை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கிறது.

ஐந்து ஆண்டுகளாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த எக்டா எனப்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு குறித்த பேச்சுக்களை இந்தியாவுடன் மீளத் தொடங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருப்பதும் அவ்வாறான ஒரு உத்தி தான்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், 2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் 11 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்ட பின்னர், இந்த உடன்பாடு குறித்து பேச்சுக்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்தன. இப்போது இந்த பேச்சுக்களை மீளத் தொடங்க ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பச்சைக்கொடி காண்பித்திருக்கிறது.

அத்துடன், சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டு அது கொழும்பில் தரித்திருந்த காலப்பகுதியில், இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரிகுமாருக்கும், இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவுக்கும் இடையில் சந்திப்பும் இடம்பெற்றிருக்கிறது.

கோவா கடல்சார் பாதுகாப்பு மாநாடு கடந்த 29ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை இடம்பெற்ற நிலையில், அதில் பங்கேற்றிருந்த இரண்டு நாடுகளின் கடற்படைத் தளபதிகளும், கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தியிருக்கின்றனர். இவையெல்லாம் இந்தியாவை சமாளிக்கும் உத்திகளாக இருந்தாலும், சீனா பற்றிய இந்தியாவின் கரிசனைகளை போக்குவதற்கு இவை மட்டும் போதுமானதாக இருக்கும் போலத் தெரியவில்லை.

யாளர். இந்தியாவின் அயல் நாடுகள், இந்தியாவின் நலன்களை புறக்கணிக்கும் போது, அல்லது அதன் விருப்பத்துக்கு மாறாக செயற்படும் போது, இந்தியாவினால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

நேபாளம் மற்றும் பூட்டானில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதும், மாலைதீவில் மாறி வருகின்ற அரசியல் சூழலும், இலங்கை அரசாங்கத்தின் விலாங்குத்தனமான தீர்மானங்களும் இந்தியாவின் நலன்களுக்கு உகந்தவையாக பார்க்கப்படவில்லை.

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் அதிகளவில் நடமாடுவது இந்தியாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அவ்வாறான கப்பல்களுக்கு இலங்கை இடமளிப்பதை புதுடெல்லியினால் சகித்துக் கொள்ள முடியவில்லை. 2013ஆம் ஆண்டு தொடங்கியது இந்த பிரச்சினை. அப்போது இந்தியாவின் எதிர்ப்பை புறக்கணித்து. கொழும்புத் துறைமுகத்தில் சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் தரித்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக் ஷ தோற்கடிக்கப்படும் நிலை உருவானது. இதனை சரியாகப் புரிந்து கொண்டு, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் கொழும்பு வருவதற்கு அனுமதி கோரப்பட்ட போது, அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அதற்கு இணங்கவில்லை.

ஆனால் அவர் ஜனாதிபதியாக வந்த பின்னர், அவ்வாறு செயற்படவுமில்லை, அவ்வாறு செயற்படவும் முடியவில்லை. இப்போது சீனாவின் செல்வாக்கு அதிகரித்து விட்டது, சீனாவை உதறி விட்டு தனித்து நிற்க முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டு விட்டது. சீனாவின் தயவும், உதவியும் அரசாங்கத்துக்குத் தேவைப்படுகிறது.

இவ்வாறான நிலையில் இந்தியாவின் கரிசனைகளையும், கவலைகளையும் முழுமையாக கவனத்தில் கொள்ள முடியாத நிலை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு ஏற்பட்டு விட்டது.

அவர் புதுடெல்லியில் இந்தியாவின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்

முகத்தில் நங்கூரமிடும் என்று வெளிவிவகார அமைச்சு கூறியது.

அடுத்தடுத்த நாட்களில் நாராவுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான அனுமதிக்காக காத்திருப்பதாக தகவல்கள் வெளியாகின. பின்னர் இரண்டு நாட்கள் மாத்திரம் இலங்கை கடற்பரப்பில், நாராவுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறியது.

இந்தக் கப்பல் முன்னர் கூறியபடி, மூன்று நான்கு நாட்கள் இல்லை, ஒரு வாரம் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றது. 31ஆம் திகதி முதல் இரண்டு நாட்கள் மேற்கு கடலில் ஆய்வுகளை மேற்கொண்டு விட்டு புறப்பட்டுச் சென்றிருக்கிறது.

இதன் மூலம், இலங்கைத் துறைமுகங்களில் சீனாவின் ஆய்வு அல்லது கண்காணிப்புக் கப்பல்களை நிறுத்துவதை தடுப்பதில் இந்தியா தோல்வி கண்டிருக்கிறது. அடுத்து இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதை தடுப்பதிலும் இந்தியா தோல்வி அடைந்திருக்கிறது.

மாலைதீவில் ஆட்சிக்கு வரும் புதிய ஜனாதிபதி, அங்குள்ள இந்தியப் படையினரை வெளியேற்றுவதில் உறுதியாக இருக்கும் நிலையில் சீனக் கப்பல் தரித்து ஆய்வுகளை மேற் கொண்டு விட்டுச்

தியை மாற்றிக் கொள்ள வேண்டும் அல்லது சீனாவை விட அதிகளவில் பொருளாதார ரீதியாக செல்வாக்கை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் இந்தியாவின் எஸ்.பி.ஐ. வங்கியை இந்திய வெளிவிவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன் திறந்து வைத்ததும், கப்பல் சேவைகள், விமான சேவைகளை அதிகரிப்பதும் கூட இந்தியாவின் பொருளாதார செல்வாக்கை உயர்த்தும் நடவடிக்கைகள் தான்.

ஆனாலும், இலங்கையில் பொருளாதார ரீதியான செல்வாக்கை சீனா அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே இலங்கையில் எரிபொருள் விற்பனையில் இறங்கிய சீனா, இப்போது எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தையும் அமைக்கவுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 100 சில்லறை விற்பனை நிலையங்கள் ஏற்கெனவே சினோபெக்கிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் புதிதாக 50 விற்பனை நிலையங்களை அமைக்கவும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் எரிபொருள் சந்தையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. ஆகியவற்றை விட குறைந்த விலையில் எரிபொருளை சினோபெக் விற்பனை செய்வது குறித்து சர்ச்சைகளும் நிலவுகின்றன.

இத்தகைய நிலையில் தான் சினோபெக்

## இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் குழுக்களால் இந்த வருடம் 32 பேர் சுட்டுக் கொலை

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் குழுக்கள் 62 துப்பாக்கிப் பிரயோக சம்பசங்களை நிகழ்த்தியுள்ளதாகவும் இதனால் 32 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 37 பேர் காயமடைந்துள்ளதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன 08 நவம்பர் 2023 புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.




நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்சன் தெனிபிட்டிய எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களை அடக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொன்று அச்சுறுத்திய ஏழு சம்பவங்களும் இந்த ஆண்டு இடம் பெற்றுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

# இந்திய நிதிஅமைச்சரின் இலங்கை வருகையும் சீன ஆய்வுக் கப்பலும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இலங்கை அரசியல் இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளது நலன்களூடாக நகர்கிறது. ஏனைய நாடுகளின் வகிபாகம் காணப்பட்டாலும் மேற் குறித்த மூன்று நாடுகளுமே பிரதான சக்திகளாக விளங்குகின்றன.

தென்னிலங்கை ஆட்சிகளும் அத்தகைய மூன்று பிரதான சக்திகளையும் கையாளுவதன் வாயிலாக வெற்றிகரமான அரசியல் இருப்பினை பாதுகாத்து வருகிறது. இதுவொன்றும் இலங்கையின் தந்திரோபாயம் மட்டுமல்ல ஒரே அயல் நாடான இந்தியாவின் இருப்பும் அதன் சந்தையும் மூலோபாயமும் சார்ந்ததாகவே உள்ளது. பிற சக்திகளுக்கு இந்தியா மீதான நட்பும் இந்தியா மீதான எதிர்ப்பும் அச்சுறுத்தலும் இலங்கையின் அரசியலை பாதுகாத்து வருகிறது.

இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்போ, இராணுவ உதவிகளோ, புலனாய்வின் ஒத்துழைப்போ மட்டுமல்ல இந்தியாவினது மூலோபாய முக்கியத்துவமும் இலங்கைக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தி வருகிறது.

இக்கட்டுரையும் இந்திய மத்திய நிதியமைச்சரது வருகை விளைவுகளைத் தேடுவதாக உள்ளது. சீனாவின் ஆய்வுக்கப்பலான ஷியான் -6 இன் வருகை (25.10.2023) பிராந்திய மற்றும் பூ கோள அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சு 31.10.2023 முதல் கடலாய்வை மேற் கொள்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது .ஷியான்-6 தனது ஆய்வை இலங்கையின் மேற்கு கரையோரப் பகுதியில் நாரா மற்றும்



ரூஹுணு பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. இதன் பிரதான நோக்கம் இலங்கையின் கரையோர கடற்பகுதியில் அமைந்துள்ள வளங்களைத் தேடுவதாகும். ஏறக்குறைய 80 நாட்கள் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடும் எனவும் சுமார் 12,000 கடல் மைல்களை கண்காணிக்க திட்டமிட்டுள்ளதாகவும் சீனா அறிவித்துள்ளது.

இதற்கமைவாக பாதுகாப்பு மற்றும் கடல் போக்குவரத்து சார்ந்தவிடயங்களிலும் சீனக் கப்பல் ஆய்வுகளை மேற்கொள்ள வாய்ப்புள்ளதாக ஆய்வுகளும் விமர்சனங்களும் உண்டு. சீனக் கப்பலது வருகைக்கு இந்தியா, அமெரிக்கத் தரப்பு எதிர்ப்பு வெளிப்படுத்தியதாகவும் அதனையும் மீறி ஷி-யான்-6 வருகை தத்துள்ளதாகவும் விமர்சனங்கள் உண்டு.

அத்தகைய எதிர்ப்பின் ஓரங்கமாகவே இந்திய வெளியுறவு அமைச்சரது இந்து சமுத்திர விளிம்பு நாடுகளின் (9-11.09.2023) மகாநாட்டிற்கு வருகை தர மறுத்ததாகவும் பின்னர் சீனக் கப்பலது வருகையை தாமதப்படுத்தியதன் பிரகாரமே ஜெய்சங்கரது மகாநாட்டுக்கான வருகை சாத்தியமானதெனவும் தகவல்கள் உண்டு.

எது எவ்வாறாயினும் சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கு இந்திய பிராந்திய அரசியலை பாதிக்கும் ஒன்றாகவே தெரிகிறது. அதில் பூகோள அரசாக அமெரிக்காவும் பங்கெடுத்துக் கொண்டுள்ளது. சீன-அமெரிக்க உலகளாவிய அதிகாரப் போட்டியின் அங்கமாக இந்து சமுத்திரமும் இலங்கைத்தீவும் அங்கம் பெற்றுள்ளன. இதில் இந்தியாவின் நிலை மேற்குக்கு சார்பானதாகவே தென்பட்டாலும்



இலங்கைத்தீவு விடயத்தில் தனித்துவமான முடிவுகளுக்கு உட்பட வேண்டிய நிலையில் இந்தியா உண்டு. இந்தியாவின் பிராந்திய அதிகாரம் சார்ந்தும் அத்தகைய முடிவை நோக்கி நகர்த்த வேண்டியுள்ளது. இஸ்ரேல் ஆதரவு நிலைக்குப் பின்னர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் போக்கில் மாறுதல் ஏற்பட்டுள்ளதாகவே தெரிகிறது. பாரதீய ஜனதாக் கட்சி 2024 தேர்தலில் வெற்றி பெறுமாயின் இந்தியாவின் வெளியுறவில் தீவிரத் தன்மைக்கான வாய்ப்பு ஏற்படுமென்றே எதிர்வு கூறப்படுகிறது. இஸ்ரேலுக்காக இந்தியக் கடற்படையினர் உளவு பார்க்குமளவுக்கு இரு நாட்டுக்குமான நெருக்கம் நிலவுகிறது. இந்தியா முழுமையாக மேற்கு சார்பான நாடாக மாற்றமுறும். அத்தகைய மாற்றம் இந்தியாவை ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும். இத்தகைய புறச்சூழலிலேயே இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கையில் நடைபெறும் 'நாம் 200' எனும் நிகழ்வுக்காக வருகை தந்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்ததை நினைவுகொள்ளும் 'நாம் 200' எனும் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரது வருகை இலங்கை அரசியலில் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவின் .இலங்கை போக்கில் மாறுதல் உள்ள தாகவே தெரிகிறது. அதனை சற்று விரிவாக விளங்கிக் கொள்வது அவசியமானது.

01.11.2023இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு வருகை தந்த இந்திய நிதி அமைச்சரை இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரங்க பாலசூரிய, அமைச்சர் ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் கட்டுநாயக்கவில் வரவேற்றனர். அதன் பின்னர் கண்டிக்கான அவரது விஜயம் அமைந்திருந்தது. அவர் முதலில் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரை சந்தித்ததுடன், வரக்காகொட சிறி ஞானரத்ன தேரரிடம் ஆசி பெற்றதுடன், இரு நாட்டுக்குமிடையிலான கலாசார உறவுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். பதிலுக்கு மகாநாயக்கர் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இந்தியா ஆற்றிய உதவிக்கு நன்றி தெரிவித்திருந்தார். அடுத்து கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த நிதி அமைச்சரை தியவதன நிலமே நிலங்க வரவேற்றதுடன், நினைவுப் பரிசையும் பெற்றுக் கொண்டார். பின்னர் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் சிறி சித்தாத்த சுமங்கல தேரரை சந்தித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டதுடன், இந்தச் சந்திப்பை தான் பாக்கியமாகக் கருதுவதாகவும் மும்மணிகளின் ஆசீர்வாதம் அவருடாக கிடைக்கும் என நிதியமைச்சர் தெரிவித்தார். அப்போது இலங்கையின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர், இலங்கையிலுள்ள பௌத்த விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு 15 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டதாகவும் விகாரைகளில் சூரியசக்தி திட்டத்தினை முன்னெடுக்க 10 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். கண்டி பயணத்தை அடுத்து அநுராதபுரத்தின் மகாபோதி விகாரைக்குச் சென்று வழிபாடுகளை நடத்திய பின் திருகோணமலைக்குச் சென்றிருந்தார். அங்கு இந்தியா அமைத்துள்ள எண்ணெய்க் குதங்களை பார்வையிட்டதுடன், திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு சென்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அதனையடுத்து 'நாம் 200' நிகழ்வில் கலந்து கொண்டதுடன், வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். ஏறக்குறைய இந்திய நிதி அமைச்சரின் விஜயம் இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் இலக்கு வைத்ததாக அமைந்துள்ளது. அவ்வாறாயின் இந்தியா .லங்கையை முழுமையாக தனது செல்வாக்குக்குள் வைத்துக் கொள்ள முனைகிறதாகனே தெரிகிறது.

அத்தகைய கொள்கையை நீண்டகாலமாக கடைப்பிடித்து வரும் இந்தியா, அதற்கான தந்திரோபாயம் எதுவுமின்றி செயல் படுகிறதாகவே தெரிகிறது. ஏற்கனவே இந்தியபாதுகாப்பு அமைச்சரது விஜயம் இரத்தானது மற்றும் வெளியுறவு அமைச்சர் திருகோணமலை விஜயத்தை கைவிட்டு நாடு திரும்பியமை என்பன கவனத்திற்குரியதாகும். ஆனால் அவற்றுடன் ஒப்பிடும் போது இந்திய நிதி அமைச்சரது வெற்றிகரமான விஜயங்கள் இந்தியாவுக்கு அவசியமான மாறுதலை தரக்கூடியதாக அமையுமா என்ற சந்தேகத்தைத் தந்துள்ளது. இந்தியா நீண்ட காலக் கொள்கையாக இலங்கைத் தீவு மீதான செல்வாக்கு சீனாவினால் ஏற்கனவே பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் அழுத்தங்களைக் கடந்தும் இலங்கை சீனாவுடனான ஒத்துழைப்பினை அதிகப்படுத்தி வருகிறது. அதனைத் தடுப்பதற்குப் பதிலாக அதற்கு மேலாக அல்லது அதிகமாக நெருக்கமடைவதை உபாயமாக இந்தியா கடைப்பிடித்து வருகிறது. அதில் இலங்கை நதியாவுடன் ஒத்துழைப்பது போன்றே செயல்படுகிறது.

இறுதியில் சீனாவுடனான உறவை வலுப்படுத்துவதில் கவனம் கொண்டு செயல்படுகிறது. இலங்கை விடயத்தில் இந்தியாவின் உத்திகள் அனைத்துமே நெருக்கடிக்குள்ளாகி வருவதாகவே தெரிகிறது. அதனை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் கண்டு கொள்வதாகவே தெரியவில்லை.

இலங்கையில் சீனாவின் நகர்வுகளை கண்டு கொள்ளும் திறன் இந்தியத் தரப்புக்கு இல்லாதுள்ளதுடன், இந்திய தேசிய நலனை விட இந்திய ஆட்சியாளர் தமது நலனிலேயே கவனம் கொள்வதனால் அத்தகைய நெருக்கடியை வெற்றி கொள்ள தயாராக இல்லாத நிலை காணப்படுகிறது.

இந்திய நிதி அமைச்சரது இலங்கை விஜயத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் பற்றிய உரையாடலை ஏற்படுத்தியதுடன், இலங்கை அரசியலை ஆளுகை செய்யும் மகா சங்கங்களை முதன்மைப்படுத்தியுள்ளார். தென்னிலங்கை ஒரு தேர்தலை நோக்கி நகரும் போது சீனாவின் இலங்கையுடனான நெருக்கத்தை அழுத்தம் கொடுத்து தவிர்க்க முடியாத நிலையில் ஆட்சி மாற்றங்களை நகர்த்த திட்டமிடுவதாக சந்தேகம் ஏற்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி தனது பதவிக் காலத்தை தேர்தல் மூலம் நீடிக்க திட்டமிடும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத் தேர்தலை நிகழ்த்தும் நோக்கத்தை பொதுஜன பெரமுன முன்வைத்துள்ளது. எனவே இத்தகைய குழப்பங்கள் அதிகமான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய நிலைமையை தொடர்ந்து எதிர் கொள்வதைக் காட்டிலும் மாற்றங்களை நோக்கி நகர்வதையே இந்தியா அதிகம் கருத்தில் கொள்ள வாய்ப்புள்ளது. அதற்கான ஒரு நகர்வாக இந்திய நிதி அமைச்சரின் விஜயம் அமைந்திருக்க வாய்ப்பு அதிகமாக உள்ளது.

எனவே இந்தியா - இலங்கை உறவானது, சீனாவின் நடவடிக்கையால் திட்டமிடப்படுவதுடன், இலங்கையின் நெருக்கடி கால சூழலை இந்தியா அதிகம் எதிர் கொண்டுள்ளது. இந்தியா தனது தந்திரோபாயத்தை மாற்றிக் கொள்ளாத வரை நெருக்கடி கால சூழல் தவிர்க்க முடியாததாகவே அமையும்.

சீனா ஆய்வுகளையும் அதற்கான இராணுவ கட்டமைப்புகளையும் வலுப்படுத்தும் போது இந்தியா இராஜதந்திர விஜயங்களையும் உரையாடல்களையும் மட்டுமே மேற் கொள்வதனால் அதிக மாற்றத்தை அடைந்து விட முடியாது என்பதை கடந்த பல தசாப்தங்கள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். சீனாவின் ஆய்வுக் கப்பலுக்கு மாற்றீடாக இந்திய நிதியமைச்சரது விஜயத்தை கருதலாமா என்பது சந்தேகத்திற்குரியதே

# கனடா ஹெலிகாப்டர் மீது வெப்ப அலைகளை உமிழ்ந்த சீனாவின் போர் விமானம்! நடுவானில் நடந்தது என்ன?



சில வாரங்கள் முன்புவரை இந்தியாவுடனான இராஜதந்திரப் பதற்றத்திற்காகச் செய்திகளில் அடிபட்ட கனடா, தற்போது சீனாவுடன் ஒரு மோதலில் உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவும் கனடாவும் சர்வதேசக் கடல் எல்லைகளை மீறுவதாகவும், தேவையற்ற இராணுவ மோதலை தூண்டுவதாகவும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன. இந்த விவகாரம், மிகவும் சிக்கலான தென் சீனக் கடல் தொடர்பானது.

இந்தப் பெரிய கடல் பகுதி தனக்குச் சொந்தமானது என்று சீனா உரிமை கோரி வருகிறது. அதேசமயம் அந்தப் பகுதியில் உள்ள பல நாடுகள் இதை மறுத்துவருகின்றன. தற்போது, தென் சீனக் கடல் வழியாகச் சென்ற தனது ஹெலிகாப்டருக்கு சீனாவின் போர் விமானங்கள் ஆபத்தை விளைவிப்பதாக கனடா குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் சில அறியப்படாத காரணங்களுக்காக கனேடிய ஹெலிகாப்டர் தனது தீவுகளை நோக்கி பறந்ததாக சீனா கூறுகிறது. தென் சீன கடலில் சர்வதேசக் கடல் எல்லையில் பறந்து கொண்டிருந்த தனது ஹெலிகாப்டருக்குச் சீன போர் விமானங்கள் ஆபத்தை ஏற்படுத்தியதாக கனேடிய பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போர் விமானங்கள் கனேடிய ஹெலிகாப்டருக்கு மிக அருகில் வந்து அதன் மீது உயர் வெப்ப அலைகளை உமிழ்ந்ததன் மூலம் பணியாளர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியதாக அவர் கூறினார். கடந்த ஞாயிற்றுக் கிழமை சீன ஜெட் விமானங்கள் நேரடியாக ஹெலிகாப்டரை கடந்து சென்றதாகவும், அதனால் அது தள்ளாடியதாகவும் பிளேர் கூறினார். பின்னர் மற்றொரு ஜெட் விமானம் ஹெலிகாப்டருக்கு மிக நெருக்கமாக வந்து அதன் மீது உயர் வெப்ப அலைகளை உமிழ்ந்தது. அதைத் தவிர்க்க ஹெலிகாப்டர் திடீரென்று தனது பாதையை மாற்ற வேண்டியிருந்தது, என்றார்.

அவர் மேலும் கூறுகையில், இதன் மூலம், தேவையில்லாமல் அனைவரும் ஆபத்தைச் சந்திக்க நேர்ந்தது. சீனப் போர் விமானங்களின் இந்த நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை,'' என்றார் அவர்.

பிளேரின் கூற்றுகளுக்குப் பதிலளித்த சீனா, 'கனேடிய ஹெலிகாப்டர் சில ரகசிய நோக்கங்களுக்காக, தீங்கிழைக்கும் வகையிலும்,எதிர்வினையைத் தூண்டும் வகையிலும் செயல்பட்டது,' என்று கூறியிருக்கிறது.

சீனாவின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாங் ஷோகாங், கனடாவின் போர்க்கப்பலின் பெயரை மேற்கோள் காட்டி ஆன்லைனில் வெளியிட்ட அறிக்கையில், 'சமீபத்தில், கனடாவின் எச்.எம்.சி.எஸ் ஒட்டாவாவில் இருந்து வந்த ஹெலிகாப்டர், சில அறியப்படாத நோக்கங்களால், சீனாவின் சிஷா தீவுகளை நோக்கி வந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் தனது அறிக்கையில், இச்சம்பவத்தை விசாரிக்கச் சொல்லி கடற்படை மற்றும் விமானப்படையை சீன இராணுவம் கேட்டுக் கொண்டதாகவும், பல எச்சரிக்கைகளை விடுத்தும் கனேடிய ஹெலிகாப்டர் பதிலளிக்கவில்லை என்றும், மிகத் தாழ்வாகப் பறந்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவத்தை கனடா பூதாகரப் படுத்துவதாகச் சீனாவின் பாதுகாப்பு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் குற்றம் சாட்டினார்.

மேலும் அவர் கனடாவின் நடவடிக்கைகள் சீனாவின் உள்நாட்டுச் சட்டங்களையும் சர்வதேச சட்டங்களையும் மீறுவதாகவும், சீனாவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துவதாகவும் உள்ளது. விபத்துகளைத் தவிர்க்கும் வகையில், கனடா. வின் விமானப்படையின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம் என்றார்.


தென் சீனக் கடலில் சர்வதேச வான்வெளியில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க இராணுவ விமானத்திடம் சீனப் போர் விமானங்கள் தேவையற்ற மோதல் போக்கைக் காட்டியதாக அமெரிக்கா கூறியிருந்தது

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் அறிக்கையின்படி, 'சீனாவின் இராணுவ விமானங்கள் சமீபத்திய நாட்களில் ஆபத்தான முறையில் நடந்து கொள்கின்றன' என்று அமெரிக்கா கூறியிருக்கிறது. மே மாதம், 'தென் சீனக் கடலில் சர்வதேச வான்வெளியில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க ராணுவ விமானத்தின் அருகே வந்து சீன போர் விமானங்கள் தேவையற்ற மோதல் போக்கைக் காட்டியுள்ளன,' என்று அமெரிக்கா கூறியிருந்தது.

இதற்கு முன்பும், தென் சீனக்கடல் வழியாகப் பல்வேறு நாடுகளின் கப்பல்கள் மற்றும் விமானங்கள் செல்வதற்குப் பல சந்தர்ப்பங்களில் சீனா எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. சனிக்கிழமையன்று, சீனாவின் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் ஜாங் ஷோகாங், 'சீன இராணுவம் அதன் இறையாண்மை, பாதுகாப்பு, கடல் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கும், தென் சீனக்கடலில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையைப் பேணுவதற்கும் எப்போதும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும்,' என்று கூறினார். நன்றி:- பிபிசி


# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START



Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# சம்பந்தர் எனும் ஆளுமையின் அவசியமும் அடையாளமும்!

இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவரான இரா. சம்பந்தன் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று அந்தக்கட்சியின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள கோரிக்கை பல்வேறு சர்ச்சைகளை கிளப்பியிருக்கின்றது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் பங்கேற்ற சுமந்திரன் எம்.பி., கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு சம்பந்தன் பதவி விலக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

சுமந்திரனின் இந்த கோரிக்கைக்கு எதிராக இலங்கை தமிழரசுக்கட்சியை சேர்ந்த பலரும் கருத்துக்களை தெரிவித்திருந்த ஸ்ரீனர். சுமந்திரனின் கருத்தில் நியாயப்பாடு இருப்பதாகவும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும் என்றும் சில தரப்பினர் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தனுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்த இலங்கை தமிழரசுக்கட்சியின் கொழும்பு கிளையின் தலைவரும் அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, வளர்த்த கடா உங்கள் மார்பில் பாய்ந்து விட்டது என்று பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உங்களை பதவி விலக சொல்லி சுமந்திரன் நிர்ப்பந்திப்பதும் அல்லாது விடத்து அதற்காக நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறியிருப்பதும் உள்நோக்கம் கொண்ட செயற்பாடாகும். இது உங்களை அவமானப்படுத்தியது மட்டுமல்ல தமிழ்த் தேசிய அரசியலுக்கான உங்களின் உழைப்பை கொச்சைப்படுத்துவதுடன் அது தமிழரசுக்கட்சியையும் இழித்துரைக்கும் செயற்பாடாகும். எனவே விரைவாக இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தனது கடிதத்தில் தவராசா சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேபோன்றே திருகோணமலை நகராட்சி மன்ற முன்னாள் உபதலைவரும் இலங்கை தமிழரசுக்கட்சியன் மூத்த உறுப்பினருமான சேனாதிராஜா சிறிஸ் கந்தராஜா விடுத்திருந்த அறிக்கையில், திருகோணமலை வாழ் தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதியாக கடந்த 46 வருடங்களாக அர்ப்பணிப்புடன் சேவை பட்டு வரும் ஒரு மூத்த தலைவரை பதவி விலகக் கோருவதற்கு சுமந்திரன் யார்? முகவரியற்றிருந்த சுமந்திரனுக்கு முகவரி கொடுத்து பாராளுமன்றம் அனுப்பி வைத்த நன்றியை மறந்து மூத்த தலைவர் சம்பந்தனை பதவி துறக்கும் படி கோருவது சுமந்திரனின் நன்றி மறந்த தனத்தை காட்டுவதாக தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழரசுக்கட்சிக்கு அப்பால் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரனும் கருத்து தெரிவித்திருந்தார்.

சம்பந்தன் வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் அடையாளமாவர். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவரது இடத்துக்கு வரக் கூடியவர்கள் எவரும் இல்லை. தமிழ் மக்களின் தற்போதைய நிலைமையை அறிய அவர்களின் இது வரை கால அவலங்களை அறிய, அவர்களில் அபிலாஷைகளை அறிய வெளிநாட்டு தூதுவர்கள் நாடும் முக்கியநபர் சம்பந்தனே ஆவார். அவர் பேசுவது விளங்கா விட்டாலும் பக்கத்தில் இருந்து அவற்றை விளங்கப்படுத்த சுமந்திரன் போன்றவர்கள் முன்வர வேண்டும். அவரை புறக்கணிக்கவோ நீக்கவோ நடவடிக்கை எடுக்காமல் அவரின் பங்கை தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக மாற்றுவது அவரின் பெயர் சொல்லி இதுவரை காலமும் அரசியல் நடத்தியோரின் கடமையாகும் என்று விக்கினேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு சுமந்திரனின் கோரிக்கை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். ஆனாலும் இந்த விடயம் தொடர்பில் மூத்த தலைவரான இரா. சம்பந்தன் இதுவரை எந்த வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. இவ்விடயம் தொடர்



பில் சம்பந்தன் எம்.பி.யுடன் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இதனைவிட தமிழரசுக்கட்சியின் மத்தியக்குழுக்கூட்டம் இன்று நடைபெறவிருப்பதனால் இவ்விவகாரம் குறித்தும் அதில் ஆராயப்படும் என்றும் கூறப்படுகின்றது.

உண்மையிலேயே பெரும் தியாகங்களை செய்திருக்கும் மூத்த தலைவர் இரா. சம்பந்தனின் ஆளுமையும் அவரது அனுபவமும் மதிக்கப்பட வேண்டிய தொன்றாகவே காணப்படுகின்றது. அவர் தற்போது வயோதிபம் காரணமாக தளர்ந்திருந்தாலும் அவரது எண்ணங்கள் மற்றும் உறுதிப்பாடு என்பன இன்னமும் தளர்ந்து விடவில்லை. ஏனெனில் அவர் தற்போதும் சர்வதேச தலைவர்களையும் இராஜதந்திரிகளையும் அரசியல் தலைவர்களையும் தனது வீட்டில் சந்தித்து வருகின்றார்.

அண்மையில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சம்பந்தனை சந்தித்திருந்தார். அதேபோன்று பதவி விலகுமாறு சுமந்திரன் கோரிக்கை விடுத்த பின்னரும் கடந்த 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை வந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினரை அவர் சந்தித்து பேசியிருந்தார். இந்த சந்திப்பில் சுமந்திரன் எம்.பி.யும் பங்கேற்றிருந்தார்.

இதன் போது அவர் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் அபகரிப்புக்கள் தொடர்பிலும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் அலட்சியம் குறித்தும் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார். இந்த சந்திப்பில் பங்கேற்ற சுமந்திரன் எம்.பி.யே சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு சர்வதேச தலைவர்களையும் தூதுவர்களையும் சந்தித்து தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் அவசியப்பாடுகளையும் தெட்டத்தெளிவாக சம்பந்தன் கூறி வருகின்றார். இவ்வாறான ஒரு தலைவரை வயோதிபம் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு கோருவது எந்த வகையில் நியாயமாகும் என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் வரலாற்றை எடுத்து நோக்கினால் அக்கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா தனது 79ஆவது வயதில் மரணமடைந்தாலும் நீண்ட காலம் உடல்நலக்குறைவுடன் அரசியல் பணியில் ஈடுபட்டவராவர். அவர் சக்கர நாற்காலியில் இருந்து கொண்டு அரசியலில் ஈடுபட்டிருந்தார். அவர் தனது வலதுகரமாக அமிர்தலிங்கத்தை கருதினார். தந்தை செல்வநாயகம் கூட்டங்களிலோ, அல்லது சந்திப்புக்களிலோ கருத்துக்களை தெரிவிக்கும் போது அவர் உரைப்பதை அமிர்தலிங்கமே மற்றொரு ஒலிவாங்கியில் வெளிப்படுத்தி வந்தார்.

1975ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் தந்தை செல்வா உடல்நலக் குறைவோடு இருந்தாலும் தனது தொகுதியான காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டு 25927 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றிருந்தார். இயலாமையுடன் அவர் வெற்றி பெற்று இரு வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட பின்னர் 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி 79ஆவது வயதில் அவர் உயிரிழந்திருந்தார்.

இதேபோன்றே தமிழரசுக்கட்சியின் வழியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த சிவசிதம்பரமும் உயிரிழக்கும் வரை பாராளுமன்ற உறுப்பினராகவே பதவி வகித்தார். அவர் உயிரிழந்ததையடுத்து பெரும் கௌரவம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு இலங்கை தமிழரசுக்கட்சியின் வரலாற்றில் மூத்த தலைவர்கள் அவர்களது அனுபவம், முதிர்ச்சி, ஆளுமை, என்பவற்றுக்காக தொடர்ந்து மதிக்கப்பட்டு வந்தனர். அவர்கள் தொடர்ந்தும் பதவிகளை வகித்து வந்தமையே வரலாறாக உள்ளது.

இந்த நிலையில் பேராளுமை கொண்ட சம்பந்தனை பதவி விலகக் கோருவதும் திருகோணமலை மாவட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேவை என்று வலியுறுத்துவதும் எந்த வகையிலும் நியாயமற்ற செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேவை என்றும் மக்களுடன் மக்களாக நின்று பணியாற்ற வேண்டும் என்றும் கோரிக்கை ஒரு சிலரால் விடுக்கப்படுகின்றது.

இவ்வாறு மாவட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதால் என்ன விடயத்தை சாதிக்க முடியும் என்பது தொடர்பில் இத்தகையவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் யாழ்., வன்னி மாவட்டங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் பல எம்.பிக்கள் உள்ளனர்.

ஆனால் அங்கு ஆக்கிரமிப்பை தடுக்க முடிகின்றதா, அல்லது சிங்கள பௌத்த பேரினவாத செயற்பாடுகளை நிறுத்த முடிகின்றதா என்று பார்க்க வேண்டியுள்ளது.

மாவட்டத்தில் எம்.பி. ஒருவர் இருப்பதால் மட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்றோ அல்லது உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்றோ கருதுவது மடமைத்தனமான செயற்பாடாகவே கருதப்படவேண்டி உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாராளுமன்ற உறுப்பினரானால் தான் அங்கு சேவையாற்ற முடியும் என்று அங்குள்ள தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் நினைக்கின்றனர்.

ஆனால் அவ்வாறு பதவி இல்லாமலும் மக்களுக்கான சேவைகளை ஆற்ற முடியும். எனவே சம்பந்தன் போன்ற ஆளுமையின் செயற்பாடு தற்போதைய நிலையில் அவசியமானது. அவர் வடக்கு, கிழக்கு தமிழர்களின் அடையாளம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

## சுமந்திரனின் கருத்துக்கு மாவையிடம் கவலைப்பட்ட சம்பந்தர்


இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பொதுவெளியில் தன்னை இராஜினாமாச் செய்யுமாறு கூறிய கருத்தானது மனவருத்தமளிப்பதாக அக்கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவிடத்தில் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவுக்கும், அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான இரு சந்திப்புக்கள் கடந்த வாரம் நடைபெற்றிருந்தது. இந்தச் சந்திப்பின்போதே, இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தனது மனவருத்தத்தினை தெரிவித்துள்ளார்.


முன்னதாக சுமந்திரன் எம்.பி. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தகலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைவாக சம்பந்தன் எம்.பியின் பாராளுமன்ற வரவு நாட்கள் மற்றும் இதர படிகள் தொடர்பில் எழுப்பிய வினாவுக்கு பதிலளிக்கையில், சம்பந்தனின் முதுமை மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக அவர் பதவியிலிருந்து இராஜினாமச் செய்வது பொருத்தமானது என்ற தனது தனிப்பட்ட கருத்தினையும், ஏலவே கட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினையும் பகிரங்கமாக தெரிவித்திருந்தார். இதனையடுத்து, மாவை.சோ.சேனாதிராஜாவை, நேரில் சந்திப்பதற்கு வருகை தருமாறு இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்திருந்தார்.

அதற்கு அமைவாக நடைபெற்ற மேற்படி சந்திப்புக்கள் தொடர்பில் மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில், சுமந்திரன், சம்பந்தன் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களை அடுத்து சம்பந்தன் என்னை நேரில் சந்திப்பதற்கான அழைப்பினை விடுத்திருந்தார். அதனையடுத்து நான் அவருடன் (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடாராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும் வாரம். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் தீர்வு ஏற்படும்.





ரிஸபராசி அன்பர்களே! புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும் வாரம். எதை செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.





மிதுனராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காணும் வாரம். தெளிவான மன நிலை இருக்கும். சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.




கடகராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும் வாரம். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். ஆனால் பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்னைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிக்கும் வாரம். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும்.




கன்னிராசி அன்பர்களே! சமயோசிதமாக செயல்படும் திறமை அதிகரிக்கும் வாரம் வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். பணவரத்து கூடும். எதிர் பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுப்பறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும் வாரம். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புது தெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும் வாரம். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாகளதையும் செய்து முடிப்பர்








தனுசுராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும் வாரம். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்சனைகள் குறையும். உத்தியோகஸ்தர்கள் பாராட்டு பெறுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! பணவரத்து கூடும் வாரம். செயல் திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிகமை குறைந்து காணப்படும்




கும்பராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த் காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும் வாரம். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மைதரும். கெட்ட கனவுகள் தோன்றலாம். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது.




மீனராசி அன்பர்களே! எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டிய வாரம். சுலபமாக முடிந்துவிடும் என நினைக்கும் காரியம்கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இனவெறிக் கூச்சலும் மன்னிப்புக் கோரலும்

(16ம் பக்கத் தொடர்ச்சி)வெறிக்கூச்சலை கண்டிப்பதில் தென்னிலங்கையில் அக்கறை காட்டப்படவே இல்லை. பொதுவில் பௌத்த மதத்தையும் சிங்கள மக்களையும் புண்படுத்துபவையாக கருதப்படும் செயற்பாடுகளுக்கு காண்பிக்கப்படுகின்ற ஆக்ரோஷமான எதிர்வினையை மற்றைய சமூகங்கள் மற்றும் மதங்களை புண்டுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் காணமுடிவதில்லை.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தை அரசாங்கம் பாரபட்சமான முறையில் குறிப்பிட்ட சிலரை தெரிவு செய்து பிரயோகிக்கிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. சர்வதேச மன்னிப்புச்சபை இது விடயத்தில் அரசாங்கத்தை வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டியிருந்தது.

அதேவேளை, சுமணரத்ன தேரரின் விவகாரத்தில் இலங்கையில் காலங்காலமாக அரசியல் அனுசரணையுடன் ஊக்கப்படுத்தப்பட்டு வந்திருக்கும் ஆரோக்கியமற்ற ஒரு கலாசாரத்தைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

சிங்கள அரசியல் சமுதாயம் அதன் தவறான கொள்கைகளையும் செயற்பாடுகளையும் நியாயப்படுத்துவதற்கு மகாசங்கத்தை தாராளமாகப் பயன்படுத்தி வந்திருப்பதால் தங்களை அரசாங்கத்தை தட்டிக் கேட்க முடியுமே தவிர தங்களுடன் அவ்வாறு அரசாங்கம் நடந்து கொள்ளப் போவதில்லை என்ற உறுதியான நம்பிக்கையை பௌத்த பிக்குமார் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் அரசியலமைப்பு பௌத்த மதத்துக்கு வழங்கியிருக்கும் அதிமுதன்மை அந்தஸ்தை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தி பெரும்பாலான பிக்குமார் சட்டத்தின் ஆட்சிக்கே சவால் விடுக்கும் வகையில் நடந்துகொள்கிறார்கள். சுமணரத்ன தேரர் இந்த வகையான பிக்குமாரில் ஒருவரே.

அரசியல்வாதிகள் கையில் எடுக்க வேண்டிய பிரச்சினைகளை பிக்குமார் கையாளுவதற்கு தூண்டிவிடும் அல்லது அனுமதிக்கும் அரசியல் கலாசாரம் இலங்கையில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு இன்று வரையில் அரசியல் இணக்கத் தீர்வு ஒன்றை காணமுடியாமல் இருப்பதற்கான பிரதான முட்டுக்கட்டைகளில் ஒன்று மகாசங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாடாகும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் அரசியல் தீர்வு முயற்சிகளை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சி மகாசங்கத்தை பிரதான நேச அணியாகப் பயன்படுத்துவது இலங்கையில் ஒரு பாரம்பரியமாகவே இருந்து வருகிறது.

சிறுபான்மை இனத்தவர்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான முன்னரங்கப் படையாக மகாசங்கம் விளங்குகிறது.

இலங்கையின் சுயாதிபத்தியம் அல்லது இறைமை அல்லது ஆட்புல ஒருமைப்பாடு என்பதை அரசுக் கட்டமைப்பு மீதான சிங்கள பௌத்த மேலாதிக்கம் என்பதை தவிர வேறு எதுவுமாக பெரும்பாலான பிக்குமார் விளங்கிக் கொண்டிருப்பார்கள் என்று நம்புவதற்கில்லை.

இன உறவுகளைப் பொறுத்தவரை, சிங்களவர்கள் மத்தியில் நிலவும் சிந்தனைக் குழப்பம், செயல் குழப்பம் ஆகியவற்றுக்கு சிங்கள பௌத்த சிந்தனையில் ஒழுக்க நியாயப் பாரம்பரியம் ஒன்று இல்லாதமை ஒரு முக்கிய காரணமாகும் என்று முற்போக்கு சிந்தனையுடைய வரலாற்றாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள்

இலங்கையின் மாபெரும் வரலாற்றுப் பதிவேடான மகாவம்சம் ஒரு பௌத்த மதகுருவினால் எழுதப்பட்டதேயாகும். சிங்கள பௌத்தர்களின் இனரீதியான சிந்தனைக்கு மகாவம்சம் பெரிதும் பொறுப்பு என்று வேறு எவரும் அல்ல மதிப்புக்குரிய சிங்கள கல்விமான் கலாநிதி ஈ.டபிள்யூ . அதிகாரம் எழுதியது பதிவில் இருக்கிறது. மகாவம்சத்தின் பிரதிகளை என்ன செய்ய வேண்டும் என்று அவர் கூறியது அதன் கூருணர்வுத் தன்மை கருதி இங்கு தவிர்க்கப்படுகிறது.

இலங்கை அரசியலில் பௌத்த மதகுருமாரின் பாத்திரம் பெரும்பாலும் எதிர்மறையானதாகவும் பிற்போக்கானதாகவும் இருந்தது.அவர்கள் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகித்த காலமும் இடைக்கிடை இருந்தது. சில குறிப்பிட்ட புறநடைகள் இருந்த போதிலும் பிக்குமார் பெரும்பாலும் கல்வியறிவற்றவர்களாகவும் அறியாமையுடையவர்களாகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை வரலாறு காட்டுகிறது.

இனக்கலவரங்களின் போது பிக்குமார் தங்களது காவியுடையை உயர்த்திப் பிடித்தவண்ணம் வெறிபிடித்த மக்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்கிச் செல்வதை நாம் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கிறோம். அத்துடன் இலங்கையில் பெரும்பாலும் பிக்குமார் புத்தபிரான் போதித்தவாறு உலோகாயதப் பொருட்கள் மீது பற்று இல்லாத வாழ்க்கையை வாழவில்லை.

இலங்கையில் மகாசங்கம் பெரும்பாலும் எதிர்மறையான பாத்திரத்தையே வகித்திருக்கிறது. சிங்கள மக்கள் மகாசங்கத்தின் செல்வாக்கில் இருந்து விடுபடாத பட்சத்தில் இலங்கையின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும். அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்கா விட்டால் இலங்கைக்கு எதிர்காலமே இல்லை.

**- வீரகத்தி தனபாலசிங்கம்**

(நன்றி -வீரகேசரி வாரவெளியீடு)

# சுமந்திரனின் கருத்துக்கு மாவையிடம்

(21ம் பக்கத் தொடர்ச்சி) இருவேறு சந்திப்புக்களை தொடர்ச்சியான நாட்களில் மேற்கொண்டிருந்தேன். சந்திப்பின் போது சுமந்திரனின் கருத்துக்கள் தொடர்பில் அவர் மனவருத்தத்தினை தெரிவித்ததோடு, அந்த விடயம் சம்பந்தமாக விரிவானதொரு கலந்துரையாடலை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், குறித்த விடயம் சம்பந்தமாக தீர்மானமொன்றை அவர் எடுப்பார் என்ற தொனிப்படவும் கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

அதேநேரம், குறித்த விடயமானது கட்சியின் உள்ளக விவகாரமாக இருப்பதன் காரணமாக, அவ்விடயம் சம்பந்தமாக பொதுவெளியில் உரையாடல்களை தவிர்ப்பதோடு, விடயங்களை பூதாகரமாக்குவதை தவிர்ப்பதும் எமது நிலைப்பாடாகும். எனினும் அவ்விடயம் சம்பந்தமாக கட்சி உரியவாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றார்.

இதேவேளைகட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளமையால் அது பற்றியும் சம்பந்தனுடன் கலந்துரையாடினேன். அந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில், கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான திகதியை தீர்மானதிப்பதற்கு முதலில் இணக்கப்பாடுகளை எட்டுவதென இருவரும் முடிவெடுத்துள்ளோம் என்றார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

HOMELIFE HIGHER STANDARDS

Ravi. Paramu
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6







OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!

- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Super Visa Insurance
- RESP, RRSP and TFSA

Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca

iA Financial Group · Canada Protection Plan · Assumption Life · Foresters · KABIS







BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

உங்கள் சகல City Permit தேவைகளுக்கு


Kathir
416 856 6900

Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com


We take the pleasure in inviting you to the launch of

## Untold Truth of Tamil Genocide

(Biography of Dr. T. Varatharah)
by Raji Patterson




**Sunday, November 12, 2023 at 6PM**

JC's Banquet & Convention Centre
**1686 Ellesmere Rd Scarborough, ON**

**RSVP:**
drtvarathan@gmail.com
or
437.328.5974


Raji Patterson


Dr. T. Varatharajan

## தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்

### நூல் வெளியீடு

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் போது, ஸ்ரீலங்கா அரச படைகளின் கோரத் தாக்குதல்களிற்கு மத்தியில், காயமடைந்த பல்லாயிரக் கணக்கான மக்களிற்கு மருத்துவ சேவைகள் வழங்கி பாதுகாத்தவரும்,

2009ம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற தமிழினப்படுகொலையின் ஐ.நா. சபையின் விசாரணையின் உத்தியோக சாட்சியாக விளங்குபவரும்,

தமிழினப்படுகொலைகளிற்கும், தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக தொடர்ந்து குரல் கொடுத்துவரும்

**டாக்டர் துரைராஜா வரதராஜா**
அவர்களின்
**தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்**
என்னும் ஆங்கில நூல் வெளியீடு

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொள்ளவுள்ள இந்த நிகழ்வில் நீங்களும் கலந்துகொண்டு உங்கள் ஆதரவை வழங்க முற்கூட்டிய பதிவுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

drtvarathan@gmail.com
or
437.328.5974


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

